OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கண் வைத்திய நிபுணர்கள் பேரிக செய்யும் கண்ணாடிகளை சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 19 ஞாயிற்றுக்கிழமை (04 - 09 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 281

# தடுப்புக்காவலில் உள்ள 200 தமிழர்களை விடுவிப்பது குறித்து அடுத்தவாரத்தில் முடிவு

## பொலீஸ் வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, செப்டெம்பர் 4

குற்றப் புலனாய்வுப் பொலீஸ் பிரிவினரால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் சுமார் இருநூறு தமிழர்களை விடுவிப்பதா இல்லையா என்பது குறித்து அடுத்த வாரத்தில் முடிவு செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பில், பொலீஸ் தலைமையகத்தைச் சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவர் இது தொடர்பாகத் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

சம்பந்தப்பட்ட இருநூறு தமிழர்களில் பலரும் கொழும்பில் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்கள் மற்றும் வன்முறைகள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள். வடக்கு — கிழக்கு மாகாணத்தில் கைது செய்யப்பட்டவர்களும் இவர்களில் அடங்குவர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இவர்களை விசாரணை செய்வதற்கெனக் குறித்த தடுப்புக் காவலில் வைத்திருக்கிறார்கள். தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் இவர்கள் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

அவசரகாலச் சட்டம் வடக்கு — கிழக்கு தவிர்ந்த பகுதிகளில் இன்று நள்ளிரவுடன் நீக்கப்படுகிறது. அதனால் தடுப்புக் காவல் சட்டமும் வலுவிழந்து போகிறது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# ஏனைய பொலீஸாரையும் விடுவிக்க நடவடிக்கை

## பலாலியில் அனுருத்த தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 4

விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் வசம் உள்ள ஏனைய பொலிஸாரையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த நேற்று பலாலியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளால் நல்லெண்ண அடிப்படையில் விடுவிக்கப்பட்ட 10 சிங்களப் பொலிஸாரையும் கேணல் அனுருத்த ரத்வத்த நேற்றுக் காலை பலாலி விமானத்தளத்தில் வரவேற்றார்.

அங்கு இடம்பெற்ற வரவேற்பு வைபவத்தில் அவர் உரையாற்றினார்.

வடக்கிலும் கிழக்கிலும் நடைபெற்றுவரும் போரை நிறுத்துவதற்கு புதிய அரசு மேற்கொண்டுள்ள சமாதான நடவடிக்கைகளின் பயனாகவே 10 பொலீஸார் விடுதலைப் புலிகளால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அரசின் சமாதான முயற்சிக்கு பதிலைத் தரக்கூடிய வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் பொலீஸாரை விடுதலை செய்துள்ளனர்.

நல்ல அடிப்படையிலான பேச்சுவார்த்தைகள் மூலமும் அரசியல் நடவடிக்கைகள் மூலமுமே வடக்கு கிழக்குப் பிரச்சி

(8 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலையான பொலீஸார் கொழும்பை அடைந்தனர்

## இரத்மலானையில் வரவேற்பு

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் விடுதலை செய்யப்பட்ட பத்துப் பொலீஸாரும் நேற்று பிற்பகல் கொழும்பு வந்து சேர்ந்தார்கள்.

இவர்கள் பயணம் செய்த விமானம் பிற்பகல் 4-00 மணிக்கு இரத்மலானை விமான நிலையத்தை வந்தடைந்தது.

இரத்மலானை விமான நிலையத்தில் பொலீஸாரின் குடும்பத்தவர்களும் அரசாங்க அதிகாரிகளும் விடுதலையானவர்களை வரவேற்றனர்.

விமான நிலையத்தில் இருந்து இவர்கள் கொழும்பு பொலீஸ் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். டாக்டர் சரவணபவன் மருத்துவ பரிசோதனைகளை நடத்தினார். (இ-4)

# புறப்பட முன் கை அசைத்து நன்றியை தெரிவித்தனர்

வடமராட்சி, செப். 4

விடுதலை செய்யப்பட்ட பத்துப் பொலிஸாரும் நேற்று பருத்தித்துறையில் இருந்து புறப்படும் போது பருத்தித்துறை துறைமுகத்தில் பெரும் எண்ணிக்கையான மக்கள் குழுமி இருந்தனர்.

கோமாரி கப்பலில் ஏறி இவர்கள் காங்கேசன்துறைக்கு புறப்பட்ட சமயம் கையசைத்து அங்கு குழுமி நின்ற மக்களுக்கு தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

இந்த பத்துப் பொலீஸாரையும் நேற்றுக் காலை 9 30 மணி அளவில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் பருத்தித்துறை இறங்குதுறைக்கு அழைத்து வந்தனர்.

காலை 10.15 மணி அளவில் இவர்களை ஏற்றிக்கொண்டு கோமாரி கப்பல் காங்கேசன்துறை புறப்பட்டது.

அங்கிருந்து பலாலி சென்று பலாலியில் விமானம் மூலம் இவர்கள் கொழும்பு புறப்பட்டனர். (இ-173)

## விடுபட்ட தபால் பொதிகள் கோமாரியில்

யாழ்ப்பாண., செப். 4

சென்ற வியாழக்கிழமை பருத்தித்துறைக்கு வந்து திரும்பிய 'பிளம்பவான்' கப்பலில் எடுத்துச் செல்லப்படாமல் விடப்பட்ட 17 தபால் பொதிகளையும் தற்போது பருத்தித்துறையில் பொருட்களை இறக்கும்பணியில் ஈடுபட்டுள்ள கோமாரி கப்பலில் எடுத்துச்செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதம தபாலதிபர் தெரிவித்தார். (இ-4)

## டீசல் மண்ணெண்ணெய்: சுங்க வரியை 20 சதவீதமாக குறைப்பதற்கு முயற்சி

கொழும்பு செப். 4

டீசல், மண்ணெண்ணெய் என்பவற்றின் மீதான சுங்க வரியை 20 சதவீதமாகக் குறைப்பதற்கு ஆலோசிக்கப்பட்டு வருவதாக நீர்ப்பாசன மின்சக்தி எரிபொருள் அமைச்சரும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

டீசல் விலை குறைக்கப்படுவதன் மூலம் நுகர்வுப் பொருள்களுக்கான போக்குவரத்துச் செலவு குறையும் அதன் மூலம் நுகர்வுப் பொருள்களின் விலைகளும் குறையும் என்றும் அவர் தெரிவித்தார்.

விவசாயிகளினதும் உற்பத்திச் செலவையும் இதன் மூலம் குறைக்க முடியும் என்றும் அவர் சொன்னார். [illegible]



## கந்தனுக்கு அரோகரா!

"நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு; அதனாலே நாட்டிலுள்ள பிணிகளோம்" — என்று தவத்திரு யோக சுவாமிகள் பாடிய நல்லூரிலே —

இன்று காலை ஏழு மணிக்கு தேரேறி வந்து பக்தர்களுக்கு அருள் புரிவான்.

தொல்லைகள் நீங்க நல்லைக் கந்தன் தேர் உலா காணலாம் இன்று

கந்தனுக்கு அரோஹரா!

[உள்ளே சிறப்பிதழ்]

## ஜனாதிபதி தேர்தல்: அறிவிப்பு இவ்வாரம்?

கொழும்பு, செப். 4

ஜனாதிபதித் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யும் திகதி பற்றிய விவரங்கள் எதிர்வரும் 9 ஆம் திகதி வெளியிடப்படக்கூடும் என கொழும்பு

(8 ஆம் பக்கம் பார்க்க)

# போக்குவரத்துப் பாதை திறக்கப்படவேண்டும்

## யாழ். அரச அதிபர் கூறுகிறார்

கொழும்பு, செப். 4

போக்குவரத்துப் பாதை ஒன்று ஏற்படுத்தப்பட்டால் தான் அவசரமாகத் தேவைப்படும் பொருள்களை விரைவாகவும், குறைந்த செலவிலும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப முடியும். கப்பல் மூலமான போக்குவரத்துக்கு செலவு அதிகம். அத்துடன் தாமதமும் ஏற்படும்.

கொழும்பில் தற்சமயம் தங்கியுள்ள யாழ் அரச அதிபர் திரு க. மாணிக்கவாசகர் பி. பி. ஸி சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சமாதான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது குறித்து யாழ் மக்கள் சந்தோசமடைகின்றனர்.

விடுதலைப்புலிகளின் தலைவர் திரு வே. பிரபாகரன் பிரதமர் சந்திரிகாவைச் சந்திப்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார். தங்களின் பாதுகாப்பை தெற்கில் அரசு உறுதிப்படுத்த வேண்டி இருப்பதால் தாம் யாழ்ப்பாணத்தில் பிரதமரைச் சந்திக்க விருப்புவதாக பிரபாகரன் தெரிவித்துள்ளார் என்றும் யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (இ-ஐ-6)

## நரோமா கப்பல் பயணிகளுக்கு

நரோமா கப்பல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பருத்தித்துறையில் இருந்து திருகோணமலைக்கு புறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற வெள்ளிக்கிழமை நரோமாவில் பிரயாணம் செய்ய பணம் செலுத்திய பயணிகளை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8 00 மணிக்கு பருத்தித்துறை இறங்குதுறையில் சமூகமளிக்கும்படி யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

# அனுப்பும மார்க்கம் குறித்து அரசு ஆராய்வு

கொழும்பு, செப். 4

"தடை நீக்கப்பட்டுள்ள பொருள்களை யாழ்ப்பாணத்துக்கு எவ்வாறு அனுப்புவது என்பது பற்றி நாம் ஆராய்ந்து வருகிறோம்."

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சர் திருமதி ஸ்ரீமனி அத்துலத்முதலி இவ்வாறு தெரிவித்தார்.

சிலவேளைகளில் பொருள்களை கப்பல் மூலமாக அனுப்பக் கூடும். தரை மார்க்கமாக - வீதி வழியாக - அல்லது ரயில் மூலமாக பொருள்களை அனுப்புவது பற்றி உடனடியாக எதுவும் கூறமுடியாது. அது விரைவில் செய்யக் கூடிய ஒன்றல்ல. எனினும் அது பற்றியும் ஆராயப்படும் எனவும் அவர் பி. பி. ஸி சிங்கள சேவைக்கு தெரிவித்தார்.

# உரிய நேரத்தில் பொருளாதார தடை முற்றாக நீக்கப்பட்டுவிடும்

## அமைச்சர் தர்மசிறிசேனநாயக்கா தெரிவிப்பு

கொழும்பு, செப். 4

உரிய நேரம் வரும் போது வடபகுதி மீதான பொருளாதாரத் தடை முற்றாக நீக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளுடன் அரசு ஆரம்பிக்கவிருக்கும் பேச்சுவார்த்தை பலனளிப்பதாக கருதப்படும் போது பொருளாதாரத்தடையை முற்றாக நீக்குவதற்கு அரசாங்கம் தயங்காது என்றும் அவர் கூறினார்.

பி. பி. ஸி. வானொலியில் இடம்பெற்ற தெற்காசிய ஆய்வு நிகழ்ச்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் அமைச்சர் இத்தகவல்களை வெளியிட்ட.

தாக த ஐலண்ட் நாளிதழ் செய்தி வெளியிட்டது

யுத்தநிறுத்தம், போக்குவரத்து தடைகளை அகற்றுதல் பற்றிய கோரிக்கைகள் பற்றி கருத்து வெளியிடுகையில் —

"பத்திரிகைச் செய்திகளைத் தவிர விடுதலைப் புலிகளுடன் எமக்கு நேரடித் தொடர்பு எதுவும் இல்லை. விடுதலைப் புலிகள் நேரடியாக எம்முடன் தொடர்பு கொண்டால் இக்கோரிக்கைகளை சாதகமாகப் பரிசீலனை செய்ய நாம் தயங்கமாட்டோம்" — என்றும் அமைச்சர் தெரிவித்தார். [இ-எ]

## சுண்டிக்குளத்தில் மீனவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 4

சுண்டிக்குளம் கடற்பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் நடத்திய தாக்குதலில் மீனவர் ஒருவர் படுகாயமடைந்தார். தங்கவேலு என்பவரே படுகாயமடைந்தவராவார். [இ-4]

## நாளை மூடப்பட்டிருக்கும்

அனுமதி வழங்கும் செயலகங்கள், குடும்ப அட்டைப் பகுதிச் செயலகங்கள், மோட்டார் வாகனப் பதிவுச் செயலகங்கள், விசாரணைப் பகுதிச் செயலகங்கள், யாழ். வங்கித் தொடர்புச் சேவைச் செயலகம் என்பன நாளை திறக்கப்படமாட்டாது என்பதை பொதுமக்களின் கவனத்திற்கு [illegible]

# வீடியோ கமெராவுக்குள் குண்டு: சந்திரிகாவை கொல்ல முயற்சி

கொழும்பு, செப் 4

சந்திரிகா கொலை முயற்சி தொடர்பாக மேலும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

வீடியோ கமெராவுக்குள் பொருத்தப்பட்ட குண்டு மூலம் சந்திரிகாவைக் கொலை செய்ய திட்டமிடப்பட்டிருந்ததாகவும் —

கொலையாளி தற்போது இரகசியப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமரான பின்னர் கண்டி தலதா மாளிகைக்கு சந்திரிகா சென்றிருந்த போது இக்கொலையை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சந்திரிகாவைக் கொல்லும் முயற்சி பதிதாகத் தெரிவான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தைக் கவிழ்க்கும் பெரிய சதித் திட்டத்தின் ஓர் அங்கமென்று உயர் பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைதான சந்தேகநபர் பொலீஸாருக்கு ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

"சந்திரிகா தலதா மாளிகைக்கு விஜயம் செய்யும் போது அவரைக் கொல்ல சதித் திட்டம் ஒன்று தீட்டப்பட்டிருந்தது. முன்தெரியாத இரண்டுபேர் என்னை குருணாகலையில் வைத்துக் கடத்தி பஜேரோ ஜீப்பில் ஏற்றிக்கொண்டு சென்றனர். ஒரு வீட்டில் அவர்கள் என்னை தங்க வைத்தனர். அங்கு வைத்து அவர்கள் வீடியோ கமெரா ஒன்றை என்னிடம் தந்தனர்.

தலதா மாளிகைக்கு பிரதமர் வரும்போது அவருக்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கிலிருந்து நடராஜர் சிலையை கடத்துவதற்கு முயற்சி

### படை அதிகாரி கைது

கொழும்பு, செப். 4

வடக்கில் இருந்து நடராஜர் சிலை ஒன்றைக் கடத்திச் செல்ல சிவில் நிர்வாகக் கடமைகளுடன் தொடர்புடைய இராணுவ அதிகாரி ஒருவர் எடுத்த முயற்சியை புலனாய்வுப் பிரிவினர் முறியடித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சிலையை தென்பகுதிக்குக் கடத்திச்செல்ல முயற்சித்த அந்த அதிகாரியை காங்கேசன்துறைப் பகுதியில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் செல்லும் முயற்சிக்கு ஐ.தே.கட்சி கைகொடுக்கவில்லை

## தொண்டமான் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 4
அரசுடன் பேச்சுகளை நடத்தும்படி விடுதலைப் புலிகளைக் கேட்டுக் கொள்வதற்காக யாழ்ப்பாணத்துக்குச் செல்ல பல முயற்சிகள் எடுத்தேன். ஐ.தே.க. தலைமைப் பீடம் அப்போது எனக்கு கை கொடுக்கவில்லை.

புதிய அரசின் கீழ் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணக் கூடிய உகந்த சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. நான் என்ன செய்ய வேண்டும்? அதற்கு நான் ஆதரவளிக்கக் கூடாதா?

இ. தொ. கா. தலைவரும் எம்.பியுமான எஸ்.தொண்டமான் முன்கண்டவாறு பத்திரிகைப் பேட்டி ஒன்றில் கேட்டிருக்கிறார்.

கடந்த செவ்வாய்க்கிழமை அவர் தனது 82ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்.

அவர் மேலும் சொன்னதாவது:

இனப்பிரச்சினை, தோட்டத் தொழிலாளர் பிரச்சினை ஆகியவற்றுக்குத் தீர்வுகாண புதிய அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு இ.தொ.கா. எம். பிக்கள் ஆதரவளிப்பர்.

ஐ.தே.க. அரசில் 17ஆண்டுகளாக நான் இருந்தபோது இனப்பிரச்சினைக்கு தீர்வு காண செயல்பட்டேன். நல்ல யோசனைத் திட்டம் ஒன்றை தயாரித்து ஐ.தே.க. அரசுக்குச் சமர்ப்பித்தேன். முஸ்லிம்களை திருப்திப்படுத்தக் கூடிய உடன்பாடு ஒன்றை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் செய்து கொண்டேன்.

ஐ.தே.க. அரசைக் கொண்டு இவற்றை ஏற்க வைப்பதில் நான் தோல்வி கண்டேன். அப்படியான ஒரு தீர்வைக் காண பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு முன் வந்துள்ளது. அவர்களின் முயற்சிக்கு நான் ஆதரவு கொடுப்பது தவறா?

நிறைவேற்று ஜனாதிபதி முறை சிறுபான்மைச் சமூகங்களுக்கு நன்மையளிக்கும் என்பதே எனது எண்ணம். இந்த நடைமுறையைத் தொடருவது என்றும் அதில் திருத்தங்களை சிறுபான்மையினரின் அபிலாஷைகளை கருத்திற் கொண்டு செய்வது என்றும் ஐ.தே.க. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருந்தது. அது இப்போது தனது நிலையை மாற்றிக் கொண்டுவிட்டது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு முன்னணி அரசுக்கு உதவப்போவதாக ஐ.தே.க. இப்போது அறிவித்துள்ளது இந்நிலையில் ஐ.தே.கவுடன் சேர்ந்து இயங்குவதை நாம் மீள்பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது.

இப்படி திரு.தொண்டமான் தெரிவித்தார். (ஐ-எ)

## விடுதலை செய்யப்பட வேண்டிய கைதிகளை தெரிவு செய்ய குழு

கொழும்பு, செப். 4
ஐ.தே.க ஆட்சியின்போது தென்பகுதியில் உள்ள தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளில் யாரை விடுவிப்பது என்பது பற்றி தீர்மானிப்பதற்காக ஐவர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது.

இக்குழு தனது அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்கும் என்று நீதி அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

தென்பகுதி முகாம்களில் சுமார் 600 அரசியல் கைதிகள் குற்றச்சாட்டுகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது. இவர்களில் சிலர் 2 அல்லது 3 ஆண்டுகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் சிலரை விடுவிக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தும் அது கவனிக்கப்படாமல் தொடர்ந்து அவர்கள் தடுப்பு முகாம்களில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கையின்படி பூஸா, மகஸின் சிறை, வெலிக்கடைச் சிறை, களுத்துறை தடுப்பு முகாம் ஆகியவற்றில் 641 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

[இ-எ-6]

## 'நட்ஸா' நிதியிலிருந்து ரூ 36 கோடி மாயமானது!

### விசாரித்து ஆணைக்குழு நியமிக்கப்படும்

கொழும்பு, செப்.4
நட்ஸா (Nadza) அதிகார சபைக்குச் சொந்தமான நிதியில் இருந்து 36 கோடி ரூபா பணம் காணாமற் போயுள்ளது தொடர்பாக பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகவலை வெளியிட்ட விவசாய, காணி மற்றும் வனவள அமைச்சர் டி.எம். ஜயரத்ன, அந்த அதிகார சபையில் இடம் பெற்ற ஊழல்களையும் முறைகேடுகளையும் விசாரிப்பதற்கு ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

## மாகாண அரசின் கீழேயே கிராம சேவையாளர்கள்!

### அரசு விரைவில் அறிவிக்கும்

கொழும்பு, செப். 4
கிராம அதிகாரிகள் மாகாண சபைகளின் கீழேயே தொடர்ந்து சேவையாற்றவேண்டும் என புதிய அரசு அறிவிக்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கிராம அதிகாரிகளை மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவது என்று ஐ.தே.க அரசின் அமைச்சரவை எடுத்த முடிவு தொடர்பாக சுற்று நிருபம் எதுவும் இன்னும் அனுப்பப்படவில்லை. இதனால் அவர்கள் மாகாண சபையின் கீழேயே பணிபுரிந்து வருகிறார்கள்.

இந்த நிலையில் தொடர்ந்தும் அவர்கள் மாகாண சபைகளின் கீழ் சேவையாற்ற அனுமதிக்கும் அறிவிப்பு புதிய அரசினால் வெளியிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [ஐ-எ]

## ஒவ்வொரு புதன்கிழமையும் இனி அமைச்சரவை கூட்டம்

கொழும்பு, செப். 4
அமைச்சரவைக் கூட்டம் இனி ஒவ்வொரு புதன்கிழமையும் காலை 8-30 மணிக்குக் கூடும் என்றும் —

நாடாளுமன்ற அமர்வு இருக்கும் புதன்கிழமைகளில் மாலை 6 மணிக்குக் கூடும் என்றும் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற முதலாவது அமைச்சரவைக் கூட்டம் இரு மணி நேரம் நீடித்தது என்று கூறிய அமைச்சர்,

ஐ.தே.க அரசில் அமைச்சர்கள் 'ஆமாம் சாமி'களாக இருந்ததால் தான் முன்னர் அமைச்சரவைக் கூட்டம் குறைந்த நேரத்தில் முடிவடையக் கூடியதாக இருந்தது என்று சொன்னார்.

## வடமராட்சிப் பகுதியில் குளம் வாய்க்கால் திருத்தம்

வடமராட்சி பகுதியில் கரவெட்டி சந்தையிலிருந்து சமேனரி வரையான கண்டவாய்க்கால், மாரிகாடு ஒற்றிக் உள்ள வயற்குளம் ஆகியன தேசநிர்மாணிகளால் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இவ்வருடத்திற்கான நீர்வளம் தொடர்பாக திரட்டிய தகவல்கள் மற்றும் ஆய்வுகளின் அடிப்படையினால் உருவாக்கிய துரித நீர்வள மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் பிரமாண அடிப்படையிலான மூலதன ஒதுக்கீட்டு நிதியிலிருந்துமேற்கொள்ளப்படும் இத்திருத்தவேலைகளினால் பல விவசாயிகள் நன்மை அடையவுள்ளனர்.

## பிரேமதாஸாவின் ஆடை தொழிற்சாலை திட்டம் தொடருமாம்!

### அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, செப். 4
மறைந்த பிரதமர் பிரேமதாஸாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட 200 ஆடை தயாரிப்புத் தொழிற்சாலைத் திட்டம் தற்போதைக்கு தொடர்ந்து செயல்படும் என்று கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி. வி குணரத்ன தெரிவித்தார்.

தொழில்வாய்ப்பளிப்பதே தற்போதைய அரசின் நோக்கமும் ஆகும் என்று தெரிவித்த அவர்,

முந்தைய அரசு செய்தது போன்று தொழிற்சாலைகளை தேர்தல் குண்டாக பயன்படுத்த முடியாது என்று தெரிவித்தார்.

ஆடை உற்பத்தி திட்டம் சாத்தியமானதா என்பது பற்றி பரிசீலனை செய்யப்படுகிறது. அது சாத்தியமானதாகக் காணப்பட்டால், 200 ஆடைத்தொழிற்சாலைத் திட்டத்தை நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்காது என்றும் அவர் கூறினார். (எ)

## வவுனியா பகுதியில் இளைஞன் சடலம்

கொழும்பு, செப்.4
வவுனியா வைரவபுளியங்குளம் சிறுவர் பூங்காவுக்கு அருகில் மர்மமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞர் ஒருவரின் சடலத்தை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

ஓமந்தையைச் சேர்ந்த இந்திரன் என அழைக்கப்படும் தணிகாசலம் ஸ்ரீதரன் (வயது 26) என்பவரது சடலமே அது என அடையாளம் காணப்பட்டுள்ளது. சைக்கிளில் நண்பருடன் சென்று கொண்டிருந்த இவரை பின் தொடர்ந்து சென்ற மூன்று பேர் இவரைச் சுட்டுக் கொன்றதாக ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இராணுவத் தினரின் புலனாய்வு பகுதியினருக்கு இவர் உதவிபுரிந்து வந்ததாகவும் சொல்லப்படுகிறது. (ஐ)

## ஆலயங்களில்

சாவகச்சேரி சந்திரசேகர வாரியவனேஸ்வரம் வருடாந்த இலட்சார்ச்சனை விழா கடந்த புதன்கிழமை ஆரம்பமாகியது. எதிர்வரும் 9 ஆம் திகதி வரை நடைபெறும் இலட்சார்ச்சனை விழாவில் திரு க. நாகேஸ்வரனின் பெரியபுராண தொடர் விரிவுரை தினமும் மாலை 6-15 மணி தொடக்கம் 7-15 மணி வரை இடம் பெறும்.

(க-111-ச1-ச0)

## பாதயாத்திரை

யாழ்ப்பாணம், செப். 4
நல்லூர்க் கந்தன் ரதோற்சவத்தையொட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணிக்கு பண்டியன் தாழ்வு ஆஞ்சநேயர் ஆலயத்திலிருந்து வழமைபோல் பரமானந்த கலாமிஜியின் தலைமையில் பஜனைக் கோஷ்டி ஒன்று பாதயாத்திரையாக செல்லவுள்ளது. (ஒ)

## அகதிகளுக்கான ஐ. நா, அதிகாரி யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், செப். 4
அகதிகளுக்கான ஐ. நா. தாபனத்தின் வவுனியா திட்டமிடப்பாளர் திரு. டேவிற் ஹட்றின் எதிர்வரும் செவ்வாயன்று யாழ் வரவுள்ளார்.

இதேவேளை ஐ. நா. அபிவிருத்தி திட்ட பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் மூவர் நேற்று கிளிநொச்சிக்கு சென்றுள்ளனர்.

யு.என் டி.பியின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதி றொபேட் இஸ்லேன்ட், பிரதி வதிவிடப் பிரதிநிதி ரீ ஹன்ட், திரு. மக்கேல் றிட்டவுட் ஆகிய மூவருமே கிளிநொச்சியில் விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

[இ-ஐ]

## இன்று

அச்சுவேலி பத்தைமேனி திர்த்தாக்குள விநாயகர் கோயில் இரதோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும் பூங்காவனம் 7 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். (க)

★ ★ ★

கந்தர்மடம் ஆத்தி குடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் 8 ஆம் திகதி வரை நடைபெறும். 9 ஆம் திகதி வெள்ளி காலை சங்காபிஷேகம் நடைபெறும்.

கும்பாபிஷேக தினங்களில் இரவு 7.30-8.30 மணிவரை திரு. த. சிவகுமாரனின் சமயச் சொற்பொழிவு இடம்பெறும். (க)

## தோற்றிய அனைவரும் சித்தி

தென்மராட்சி, செப். 4
அண்மையில் வெளியாகிய தொலைக்கல்வி ஆசிரியர்களுக்கான பகுதி - I இறுதிப் பரீட்சைக்கு பளைக் கல்விக் கோட்டத்தில் இருந்து தோற்றிய 35 ஆசிரியர்களும் சித்தி அடைந்துள்ளனர்.

இவர்களில் செல்வி ம. இந்துமதி இரண்டு அதிவிசேட சித்திகளும் நான்கு விசேட சித்திகளும் பெற்று கோட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார். (எ-117)


### பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

## கிளைக்குழுத் தேர்தல் - 1994

கிளைகளின் விவரம்

| கிளை இல. | கிளையின் பெயர் |
|---|---|
| 01 | மாதகல் |
| 02 | மாதகல் மத்தி |
| 03 | மாதகல் பரிஷ் |
| 04 | மாதகல் நுணசை |
| 05 | மாரீசன்கூடல் |
| 06 | பெரியவிளான் |
| 07 | இந்திரமேழி |
| 08 | சரஸ்வதி - பிரான்பற்று |
| 09 | பண்டத்தரிப்பு |
| 10 | சில்லாலை |
| 11 | வடலியடைப்பு |
| 12 | இளவாலை |
| 13 | பாசத்தனை |

நியமனப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் திகதி: 17 - 09 - 1994 சனிக்கிழமை

நேரம்: முற்பகல் 9மணி தொடக்கம் முற்பகல் 10 மணி வரை

நியமனப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இடம்: சகல கிளைகளுக்கான (01 தொடக்கம் 13 வரை) நியமனப்பத்திரங்கள் "யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை" உடுவில் றோட், மானிப்பாயில் ஏற்றுக்கொள்ளப்படும்.

அபேட்சகர் நியமனங்களில் ஆட்சேபனை ஏதும் இருப்பின் அன்றைய தினம் முற்பகல் 10மணி தொடக்கம் முற்பகல் 11மணிக்கிடையில் தேர்தல்/உதவித்தேர்தல் உத்தியோகத்தரிடம் எழுத்து மூலமாக ஒப்படைத்தல் வேண்டும்.

தேர்தல் இருப்பின் தேர்தலும் வாக்களிப்பும்: 24 - 09 - 1994 சனிக்கிழமை

நேரம்: முற்பகல் 9மணி தொடக்கம் பிற்பகல் 4மணி வரை

இடம்: யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை உடுவில் றோட், மானிப்பாய்.

குறிப்பு: நியமனப் பத்திரங்கள் 10-09-1994 தொடக்கம் சங்கத்தின் சகல விற்பனை நிலையங்களிலும் நிவாரணக் கிளைகளிலும், தலைமைக் காரியாலயத்திலும் பணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

சு. கணேசமூர்த்தி,
தேர்தல் உத்தியோகத்தர்.

பிரதேச செயலகம்,
வலி. தென்மேற்கு,
சண்டிலிப்பாய்.

[இ-8985]



## வேலை வாய்ப்புக்கள்

பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் ஒன்றுக்கு கீழ்க்கண்டோர் தேவை.

1. கணக்கியல்/கணக்காய்வு எழுதுவினைஞர்
2. கணக்கியல்/கணக்காய்வு எழுதுவினைஞர் [பயிலுநர்]

தகமைகள்:

(அ) க.பொ.த. உயர்தரம் கணக்கியல் பாடத்தில் சிறப்பு சித்தி அடைந்திருக்க வேண்டும்.
(ஆ) கணக்கியல் நிறுவனங்கள் நடத்தும் பரீட்சைகளுக்கு ஆயத்தம் செய்பவர்கள் சிறப்பு தகைமையுடையவராக கருதப்படுவர்.

3. கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களத்தில் வேலை செய்து இளைப்பாறியவர்கள்.
4. காரியாலய உதவியாளர்:

வயது: 18 25

09-09-1994க்கு முன் விண்ணப்பிக்கவும்

இல 949,
மே/பா உதயன்.

(7745)



யாழ். மாவட்ட
வெதுப்பக உரிமையாளர் சங்கம்

## வெதுப்பி 5/- (பாண்)

07-09-94 புதன்கிழமை முதல் மாவின் விலை அரசாங்கத்தினால் குறைக்கப்பட்டிருப்பதனால் வெதுப்பியின் (பாணின்) விலை 2-50 இனால் குறைக்கப்பட்டுள்ளதை பொது மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ஆகவே வெதுப்பியின் விலை 07-09-94 முதல் ரூபா 5/- ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது வியாபாரிகளுக்கு விற்பனைக் கழிவாக வெதுப்பி ஒன்றுக்கு -/25 சதம் கொடுப்பதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விலை, தரம், நிறை ஆகியவற்றின் குறைபாடுகள் எமக்கு அறியத்தரவும்.

ந. பாலசுந்தரம் நயகர்
யாழ் மாவட்டச் செயலாளர்

யாழ். மா. வெ. உ. சங்கம்,
183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(இ-8993)



நல்லூர் வணிகர் கழகம்

## முக்கிய அறிவித்தல்

நல்லூர் தீர்த்த உற்சவத்தை முன்னிட்டு 05-09-94 திங்கட்கிழமை நல்லூர் வணிகர் கழக எல்லைக்குட்பட்ட அனைத்து வணிக நிலையங்களும் முழுமையாக பூட்டப்பட்டிருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

சு. தனபாலசிங்கம்
செயலாளர்

நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்.

(இ-8991)


## 4 ஆவது ஆண்டு நினைவஞ்சலி!



கர்த்தர் கொடுத்தநாள் 16 - 10 - 1963
கர்த்தர் எடுத்தநாள் 04 - 09 - 1990

பரம அழைப்பின் நாள் 04-09-1990

### சின்னத்தம்பி ஜோசுவா

"பிறக்க ஒரு காலமுண்டு இறக்க ஒரு காலமுண்டு" (பிரசங்கி, 3:2)

'எங்கள் அன்பு இதயமே!

இந்த உலகத்தில் நீ இருக்கும் பொழுது, கர்த்தருக்குள் எமது குடும்பத்தில் மகிழ்ச்சியாய் திகழ்ந்திருந்தாய். ஆனால்இன்றோ நம் பரம பிதாவின் மார்பில் சாய்ந்து நீ இளைப்பாறிக் கொண்டிருக்கிறாய் இந்த சிந்தனை ஒன்றே எங்களுக்கு ஆறுதல்.

அன்பு மனைவி - மகன்
றீட்டா - ஜோய்
உற்றார், உறவினர்கள்
(குடும்பம்)

எபனேசர் ஜெபநிலையம்,
கனகரத்தினம் வீதி,
வட்டுக்கோட்டை.

(7743)


அன்னை ஜீவாகாரம்

## ஜீவாகாரம்

தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தினால் நடத்தப்படும் நல்லூர் கண்காட்சிச் சாலையிலுள்ள அன்னை தொழிலக விற்பனை நிலையத்தில் அன்னை ஜீவாகாரம் போன்ற எமது உற்பத்திப் பொருட்களை ரூ 300/- க்கு கொள்வனவு செய்து ஒரு சேலைப் பையை இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

[இ-9026]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா சிறப்பிதழ்

(04 - 09 - 1994)

# தொல்லை வினை தீர்க்கும் நல்லையிலே
# வல்ல முருகன் வடிவேலன் தேரில் உலா

"நல்லை என்றதுமே தொல்லை இல்லையாகும்" என்பது ஆன்றோர் அனுபவம். நல்லூர் முருகன் ஆலயம் நடுநாயகமானது. தனித் தன்மை வாய்ந்தது. குன்றா அழகின் அருளின் உறைவிடம்.


இயற்கை வனப்பும் எழிலும் நிரம்பிய குறிஞ்சி நிலத் தெய்வமாகி முருகப்பெருமான் இளமை, அழகு, மணம், தெய்வ நலம் எல்லாம் ஒருங்கே அமையப் பெற்ற நிகரற்ற அழகனாக விளங்குகின்றான். முருகப் பெருமானுடைய வரிதியாகிய பயிலும் திவ்யழகு வாய்ந்தது. திருச்செங்கோட்டில் எழுந்தருளியிருக்கும் முருகனைக் கண்டு தொழுவதற்கு நான்முகன் நாலாயிரம் கண்களைப்படைக்கவில்லையே என்று அடியார் கூறுவதிலிருந்து முருகனுடைய அழகின் மகிமை புலனாகின்றது.

பக்தர்களுக்கும், அடியார்...

தேர்த்திருவிழா மிகச் சிறப்பானது. தேரும் தேரோடும் வீதியும், தேரடியும் புனிதமானவை. நல்லூர்த் தேரடியில் தவம், ஜெபம், தியானம் என்பவற்றில் ஈடுபட்டவர்கள் செல்லப்பாசுவாமிகளும், சிவயோகசுவாமிகளும் ஆவர். செல்லப்பாச் சுவாமிகளை நல்லூர்த் தேரடியில் யோகர் சுவாமிகள் கண்டு தரிசித்தார். "நல்லூர்த் தேரடியில் என் குருவைக் கண்டேன்" என்றும் "தேரடியிற் தேசிகனைக்கண்டு தரிசித்தேன்" என்றும் சிவயோக சுவாமிகள் தமக்குக் கிடைத்த குருவருள் பற்றிக் கூறியுள்ளார்.

...





## முருகனின் திருவருள் பொலிக

...செம்மனச் செல்வர்களே! நல்லை கந்தப் பெருமானின் ரதோற்சவம் காண்பது கோடி புண்ணியம். இன்று எழுந்தருளும் ஆறுமுகப்பெருமானின் முகப்பொலிவை உள்ளூர்ந்த பக்தியுடன் உற்று நோக்குபவர் மட்டுமே உணர்வர். ஒருமையுடனும் நிர்மல சக்தியுடனும் அசைக்க முடியாத பக்தியுடனும் தரிசிப்பவர்க்கே தேறும்.

எல்லோரும் இன்புற்று கவலைகள் நீங்கப் பெற்று நலமே நீடுவாழ முருகப்பெருமானின் திருவருள் பொலிவுமாறு உளமார வேண்டி எல்லோருக்கும் எமது மனப்பூர்வமான நல்லாசிகளை வழங்குகிறோம்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

முதல்வர்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

## தீர்வை நன்று தருவாய்

தொல்லை நிறை வாழ்க்கை தரும் துன்பநிலை போக்கி
நல்நெறியே செல் நெறி யென நல்லவர்க்கும் காட்டி
நல்லவர்கள் வாழ்வர் என்ற உண்மை நிலை நாட்டித்
தொல் புகழ் நல்லூர்க் குமர! தேரின்று வருவாய்!

தேன் பிலிற்றும் திருப்புகழில் தோய்ந்து வள்ளி தெய்வ
யானை யொடு, நமக்கருளத் தேரிலே ஏறிக்
கோனகரின் வீதிகளில் ஊர்ந்து வரும்முருகா!
மானமொடு நாம் தமிழர் வாழ வழி யருள்வாய்!

...போர் புரிந்தெம் முரிமைகளைக் கேட்டோம்
பாருலகில் வாழத் தமிழ் ஈழம் எனக் கேட்டோம்.
சீரிழந்த இங்களர்க்குஞ் செம்மை நெறி காட்டி;
தேரில் வரும் வேல் முருகா! தீர்வை நன்று தருவாய்!

— சிற்பி

## கோமகனை ஏத்த வருவீரே!

ஆறுமுக சாமி தேரின்மிசை ஏறி
ஆரவு நல்க வருகின்றான்
ஆசைதரும் பாசம் நாசமுற நேசர்
ஆரமுதம் ஆனான் வருகின்றான்
மாறுபடு சூரன் வீழவிய வலை
வாங்கிவிடு பாங்கன் வருகின்றான்
மாசறியாத் தேக வீசமொழி மாரியின்
மாதடம்பன் ஏகன் வருகின்றான்
தேறகலை நாடு ...விழி யாரின்
தீமைகளை ஏமன் வருகின்றான்
சேமமுற வல்லான் நாமமுரைப் பாரைச்
சேர்ந்தருளுந் தீர்த்தன் வருகின்றான்
கூறரிய தொகலை ஆறுதவிக் கூழகி
கூவுபவர்க் காப்பான் வருகின்றான்
கூருமெழில் நல்லை சாருமுரு கோனைக்
கோமகனை ஏத்த வருவீரே.

— சொக்கன்

## தேரேறி வருகின்றான்!

நல்லை நகர் வீதியிலே
நமையாளும் முருகனவன்;
நம்மவரைக் காத்திடவே
தேரேறி வருகின்றான்!

நல்லோரைக் காத்திடவும்
தீயோரை வதைத்திடவும்
நல்லைநகர் வேலனவன்
தேரேறி வருகின்றான்!!

கணபதியின் தம்பியவன்
கடம்பனெனும் நா(ம)முடையோன்;
கடந்தேறும் வழியமைக்க
தேரேறி வருகின்றான்!!!

தஞ்சமென அடைந்தோர்க்கும்
தடங்கலென வந்தோர்க்கும்
தரணியிலே வழிகாட்ட
தேரேறி வருகின்றான்!!!!

— வண்ணை. சே. சிவராஜா

## நீதி துலங்கிடச் செய்!

வெள்ளமாய் கண்ணீர் பெருகிறது - நிதம்
வேதனையில் வாழ்வு கருகிறது
முள்ளில் விழுந்த மலர்போல -சிறு
பிள்ளை துடித்து மடிகிறது.

நாளெனும் அந்தை சிரிக்கிறது - எங்கும்
நாம் எனும் தத்துவம் மறைகிறது
"ஓம்" எனும் மந்திரம் எங்கு - ஐயா!
ஒன்றே குலமென்பர் அதுவும் பொய்யா?

உள்ளம் உருகியுனைப் பாடுகிறோர் - மெய்
உணர்வுடன் காவடி ஆடுகிறார்
துள்ளி யெழுந்து பகை முடித்தே - நீதி
துலங்கிடச் செய்து வளம் தருவாய்!

— நெடுந்தீவு லக்ஸ்மன்.

## எஸ். கே. யோகநாதன்

# அழகன் முருகவேள் அருட் பேரொளனாக
# நல்லூரிலே இன்று காட்சி தரும் மாட்சி

ஆலய மகோற்சவம் காண்டல் மனிதனை மகோன்னத நிலைக்கு எடுத்துச் செல்லும். மகோற்சவங்களையே திருவிழாக்கள் என்கிறோம். இவ்வகையான நல்விழாப் பொலிவு கண்டார்தம் நல்லன் பிறவியை இறுதிவரை...

...

இன்று நேற்று வந்ததல்ல

...

சைவப்புலவர்
### பொன். தெய்வேந்திரன்

...

(7 ஆம் பக்கம் பார்க்க)

எமது மண்ணில் நற்பெயர் பெற்றது




றோயல் றோஸ்
ரால்கம்பவுடர்

- நறுமணமிக்கது
- சுகாதாரமிக்கது
- புத்துணர்ச்சியானது
- அனைவராலும் விரும்பதக்கது
- விலை மலிவானது

தீபா றோஸ்
ரால்கம்பவுடர்




அழகிய கொள்கலன்களில் அற்புத தயாரிப்பாக விற்பனையிலுள்ளது

றோயல் இன்டஸ்றீஸ்
பொன்னையா லேன்,
வண்ணார்பண்ணை வடமேற்கு,
ஆனைக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா சிறப்பிதழ்

(04 - 09 - 1994)

தண்ணொளி வீசி தமிழன் வாழ்ந்திட
ஏறுமயில் ஏறிவரும் இளையோனே உந்தன்
தேர் ஏறி வரும் காட்சிதனை—காண
கண்ணாயிரம் வேண்டுமையா

ரவி அன் ராஜ் சில்க்ஸ்
77, பெரிய கடை வீதி
யாழ்ப்பாணம்

நல்லையம் பதியுறை நாதனே
நம்மவர்க்கு அருளும் தேவனே!

ஆர். வீ. ஜீ. பீடி ஸ்தாபனம்
58. குருக்கு வீதி
நல்லூர்

ஆா. வீ. ஜீ. மருந்தகம்
504. ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

நல்லைப் பதி வாழ் வேல்முருகா!
அன்பர் குறை தீர்க்க வா!
இன்றைய அறிமுகம்! நாளைய நாகரிகம்!
★ காலத்திற்கேற்ற வகையில் நவீன டிசைன்களில் ஆடைகளை தெரிவு செய்யவும்
★ மங்கள வைபவங்களுக்கான பட்டுச் சேலை வகைகளை தெரிவு செய்யவும்
★ இறக்குமதி செய்யப்பட்ட ஆடைத் தினுசுகளுக்கும்

சோபனா ஆடை அகம்
16, பெரிய கடை
யாழ்ப்பாணம்

மதுரா பட்டு மகால்
75, பெரியகடை யாழ்ப்பாணம்

எரிக்கணேஷ்
(மூக்குக் கண்ணாடி விற்பனையாளர்)
566, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்
விழி உங்களிடம் அதன்
ஒளி எங்களிடம்



குரானைச் சொல்வதில் குரானே!
குரானம் பொய்மையைத் திரானே!
★ அழகிய தங்க ஆபரணங்களுக்கு
22 கரட் தங்க நகைகள் குறித்த தவணையில் பெற்றுக் கொள்ளவும்!
நம்பிக்கை! நாணயம்! உத்தரவாதம்!
பெற்ற நிறுவனம்



மைதிலி நகை மாளிகை
190/1 A. லெப் கேணல் சந்தோஷம் தெரு
யாழ்ப்பாணம்

## முத்தமிழ் வித்தகன் முருகன்

முருகன் ஒப்பற்ற தமிழ் புலவன் சங்கத் தமிழின் தலைமைப் புலவன் இயல் இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் சிறந்தவன் வழுதியர் வளர்த்த தமிழுக்கு பெருமை சேர்த்தவன். முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன் என்பதிலிருந்து தமிழ் மீது அவனுக்கிருக்கும் ஈடு



பாட்டுடை உவரானம் தமிழ்க் கடவுளாக இருக்கும் முருகன் தமிழ் வளர்த்த கடவுளாகவும் தமிழில் உயர்ந்த சமர்த்தோனாகவும் விளங்குகின்றான்.

சிவபெருமானுக்கு ஒப்பானவர் அகத்தியர். அவர் பொதியமலை முனிவன். தமிழுக்கு இலக்கணம் செய்தவர் - தமிழை வளர்த்தவர் அகத்தியர் என்பது தமிழர் பரம்பரையாக நம்பி வரும் செய்தி

தமிழ் முனிவன் என்பது அகத்தியரையே குறிக்கும் ''தமிழ் என்னும் அளப்பரும் சலதி தந்தவன்'' என்று கம்பர் அகத்தியரை குறிப்பிடுவது அவரின் ஆழ்ந்த தமிழ் புலமைக்கு எடுத்துக் காட்டாகும்.

தமிழை முற்றுணர்ந்த அகத்திய முனிவருக்கே முருகன் தமிழைப் பொழிந்தனன் (போதித்தான்) என்றால் அவனின் தமிழ்ப் புலமையை அளவிட முடியுமா? இதனை அருணகிரியார் பின்வருமாறு கூறுகிறார்.

''சிவனை நிகர் பொதிய வரை; முனிவன் அகம் மகிழ இரு; செவி குளிர இனிய தமிழ் பகர்வோனே;

அகத்தியர்க்கு மட்டுமா? சிவபெருமானுக்கே தமிழின் உண்மையைப் போதித்தவன் முருகன் தான் எனப்பாடுகிறார் அருணகிரியார் தந்தைக்கு உபதேசித்தவன் முருகன் என்ற தகப்பன் சாமி தம்மிலும் தம் மக்கள் அறிவுடைமை என்ற திருவள்ளுவரின் கருத்து இங்கு நினைவு கூரத்தக்கது.

''கொன்றைச் சடையார்க்கு! ஒன்றைத் தெரியக் கொஞ்சித் தமிழைப் பகர்வோனே''

தனக்குத் தமிழிலே பாடும்படி அருள் செய்தவன் முருகனே எனப்பாடுகின்றார் அருணகிரியர். தமிழை தனக்கு முருகன் அருளியதை அவர் ''நிதமே நிதிக்க அரிய தமிழ் தான் அளித்த மயில் வீரா'' என்று பாடுகிறார்.

வளர்ந்து வரும் செந்தமிழ் மொழியால் வழுத்தி உன்னை என்றும் வயாரப் போற்றும் உள்ளத்தை எனக்கு உதவுவாய் என்று உமைபாலனை இன்னொரு இடத்தில் உள்ளன்புடன் வேண்டுகின்றார் அருணைப் பெருமான்.

இதில் வளர் செந்தமிழ் என கூறப்பட்டிருப்பது தமிழ் வளர்ந்து கொண்டிருக்கும் மொழி என்பது உணர்த்தப் பட்டுள்ளது பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் செய்து வளம் பெறும் மொழி

எனவே தெய்வத் தன்மையுடைய தமிழ் மொழியை வையகத்தில் எங்கு சென்றாலும் அனைவரும் தமிழ் பேச வேண்டும் என்று உள்ள உறுதி கொண்டால் மெய்யாய் தமிழ் மேதினியில் மேன்மை பெறும்.

தமிழ்க் கடவுள் முருகனின் தேர்த்திருவிழா வன்று அது குறித்து சிறிது சிந்தனையில் கொள்வோமாக.

-வரதசி சிவராமலிங்கம்-



★ அண்மையில் வெளியான MX-1 மிக்ஸிங் மூலம் கண்களுக்கு விருந்தளிக்கும் கவராக் கோணங்களை கலந்த வண்ணக் கலவையாய் வீடியோ படம் பிடித்திடவும்
★ கொம்பக் டிஸ்க் (CD) மூலம் பழைய, புதிய பாடல்களை உடனுக்குடன் ஓடியோ ஒளிப்பதிவு செய்து கொள்வதற்கும்

ரவி ஒளி கானம்
(சுப்பஸோ வீடியோ சென்ரர்)
100 A. அர்ச்சுனா சாலை
யாழ்ப்பாணம்

G. C. C.
வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்
514/14 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(பழைய O. P. Dக்கு முன்பாக)
கண், காது, மூக்கு தொண்டை (ENT), முறிவு, மகப்பேறு, சத்திர சிகிச்சை, சிறுபிள்ளைகளுக்குரிய வைத்தியம், சருமநோய்கள் என்பவற்றிற்கு விசேட வைத்திய நிபுணர்களினால் ஆலோசனை வழங்கப்பட்டு வருகின்றது. இத்துடன் மருத்துவ ஆய்வுகூட சேவைகளும் (E, C, G,) இங்கு நடை பெறுகின்றன.

முருகன் புகழ் பாடி அருள் பெறுவோம்!
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்

அருச்சுனா நகை மாடம்
120 B, சந்தோஷம் தெரு
யாழ்ப்பாணம்

நல்லூரான் தேரேறி காட்சி
தரும் இவ்வேளையில் நாட்டில்
நடப்பவை எல்லாம் நல்லவையாக
நடக்க அருள் பாலிப்பாராக

அண்ணா தொழிலகத்தின்
மற்றுமோர் தயாரிப்பு
இலகு தோசைமா
இலகு இட்லிமா

உள்நாட்டு வெளிநாட்டு
றெடிமேட் ஆடைகள் மற்றும் பட்டு, நைலெக்ஸ் சேலைகள், சேட், றெடிமேட் ஜீன்ஸ் வகைகளுக்கு
யாழ். நகரில் தன்நிகரற்ற ஸ்தாபனம்

புதிய மகிழ்ச்சி ஆடையகம்
(நியூ ஹப்பி ரெக்ஸ்)
146 சிறப்பு அங்காடி
யாழ்ப்பாணம்

தமிழ் மக்களின் துயர் துடைக்க
நல்லூர் கந்தன் அணைபுரிய இறைஞ்சுகின்றோம்
ஓடர் நகைகள் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்



கணேசா நகையகம்
194. சந்தோஷம் தெரு
யாழ்ப்பாணம்

நல்லூர்க் கந்தன் தேரூர்ந்து
நல்லோர்க்கின்பம் தாராயோ?
ச. சி. ஞானம்
(அஜந்தாஸ்)
ஆடை அகம்
54. பெரியகடை வீதி
யாழ்ப்பாணம்

திருமணம் மற்றும் முகூர்த்தப்
பட்டுப் புடவைகளுக்கு
நாடுங்கள்:
இளவரசி சேலைச் சோலை
57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

கே. எஸ். ஆர். போட்டோஸ் எனும ஸ்தாபனம்
ஒளிப்பட கலையகம் (LIGHT STUDIO)
வீடியோ / புகைப்பட சேவை
எனும் புதிய பெயர் மாற்றத்துடன் கூடிய சிறப்பு சேவையை வழங்குவதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றது
எமது நிறுவன படப்பிடிப்பு சேவையை பெற்று எம் உயர்வுக்கு வழிகாட்டி தனித்துவமான சிறப்பு இடத்தை பெற்றுத் தந்த வாடிக்கையாளர்களுக்கு எமது இதய நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம் தொடர்ந்தும் புதிய பெயருடன் சிறப்பு சேவை பெற்று மகிழ்வுற அன்புடன் அழைக்கின்றோம்.
குறிப்பு:
வாடிக்கையாளர்களே!
உங்கள் திருமண, பூப்புனித நீராட்டு விழா, பிறந்தநாள் போன்ற மங்கள வைபவங்களை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளுங்கள்
ஒளிப்படக் கலையகம்
இல. 766, காங்கேசன்துறை வீதி,
தட்டாதெரு சந்தி
யாழ்ப்பாணம்

பச்சையுடுத்திப் பவனி யெழுந்திடும் பாங்கு
நிறைந்தவனே - கையில் வச்சிர வேலுடன்
அச்சந்தவிர்த்திட வந்தருள்வாய் முருகா!
● அறு சுவை உண்டிகள்
● குளிர்பான வகைகளுக்கு
லிங்கம் கூல் பார்
வெலிங்டன் சந்தி,
52, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா சிறப்பிதழ்

(04 - 09 - 1994)


தொல்லைகள் தீர்ப்பதில் தோழனே
தொண்டர்க்கு அருள்வாய் வேலனே!
★ சகல விதமான சிற்றுண்டி வகைகள்
★ குளிர்பானங்கள்
போன்றவற்றிற்கு
வெங்கோ கூல் பார்
இல. 5, பலாலி றோட், திருநெல்வேலிச் சந்தி.

★ ஐஸ் கிறீம் வகைகள்
★ சிற்றுண்டிகள் ★ கேக் வகைகள்
குறித்த நேரத்தில் பெற்றுக் கொள்ள
கல்யாணி கிறீம் ஹவுஸ்
73, சந்தோஷம் தெரு, யாழ்ப்பாணம்.

சிறந்த ரக கலர், கறுப்பு வெள்ளை படங்களுக்கு
அன்றும் இன்றும் பெயர் பெற்றவர்கள்
பாரத் ஸ்ருடியோ
82 A, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

மயில் ஏறும் மன்னவா!
எம் மனமேற இங்குவா!!
சாந்தா அழகுச் சோலை
65 [89], சந்தோஷம் தெரு (கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.
எம்மிடம் அழகு சாதன பொருள்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.

வள்ளி தெய்வானையுடன் வலம் வரும்
நல்லைக் கந்தா!
உன் அருள் பெற வாழ்த்துகின்றோம்.
அனைத்திலும் குறைந்த விலையில்
நிறைந்த மகிழ்வுடன்
பெற்றுக் கொள்ள
திருபாட்டி
122, மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம்.

ஜெயச்சித்ரா நகை மாளிகை
என்ற எமது ஸ்தாபனம்
தற்போது
யமுனா நகையகம்
என பெயர் மாற்றப்பட்டு இயங்குகின்றதென்பதை
வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
177 D, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்;
வினோ நகைப் பூங்கா
185, சந்தோஷம் தெரு யாழ்ப்பாணம்.

படப் ஒலிப்பதிவு, பாவனைப் பொருள்கள்
மற்றும் வீடியோ பிரதிகளை
வாடகைக்கு பெறவும்
வீடியோ எக்கனோமி
303 A, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் அழகுக்கு மெருகூட்டும்
22 கரட் நகைகளைப் பெற்றுக் கொள்ள
அலங்கார் நகை மாளிகை
81/7, சந்தோஷம் வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் புகைப்படத் தேவை எதுவாயினும்
நீங்கள் நாடவேண்டிய இடம்:
அருணோதயம் புகைப்பட கலையகம்
218, பலாலி வீதி, சுந்தர்மடம் சந்தி,
யாழ்ப்பாணம்.

வடிவேல் கொண்ட சண்முகனே
வந்தென் இடரை அறுப்பாயே
ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில்
செய்து கொடுப்பவர்கள்
ஸ்ரீ வாணி ஜுவலேர்ஸ்
173, சந்தோஷம் தெரு, யாழ்ப்பாணம்.

முருகன் புகழ்பாடி அருள்வோம்!
மதி நகை வாணிபம்
226, சந்தோஷம் தெரு, யாழ்ப்பாணம்.

நல்லூரான் வீதி நடந்தார்க்குப்
பொல்லா வினைகள் தீரும்
சகல ஆடம்பர விளையாட்டு
பாவனைப் பொருள்களையும்
நிதான விலையில் விற்பவர்கள்
ராஜு ஸ்ரோர்ஸ்
67, 69, வெப். லேனைக் சந்தோஷம் தெரு.
யாழ்ப்பாணம்.

"தேர் ஏறிவரும் முருகா!
தமிழ் மக்கள் துயர் தீர்ப்பாய்"
யாழ் நகரில் அன்றும் இன்றும் என்றும்
சகல விதமான பிரம்பு, கதிரைகள் திருத்துபவர்கள்
ராஜன் பின்னல் அகம்
கிளை
39, மணற்மகள் வீதி, அரியாலை.
இல. 286, பிரான்பற்று வீதி, யாழ்ப்பாணம். (வாளவில் அருகில்)


## அருள் தரும் ஆறுமுகன்

முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன் முருகன். தீந்தமிழால் புகழ்பாடும் அடியவர் இன்னல் களைந்து, இடர்கள் போக்கி இன்னருளை அள்ளி வழங்கும் டுந் திருடன் பெம்மான் முருகன் பிறவான் இறவான்'' என்ற அருணகிரியார் கூற்றுப்படி காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி வழிபடும் அடியார்களின் அல்லல் நீக்கி அருள் தமிழ்க் மெய்யெழுத்துக்கள் பதினெட்டு. ஆயுதம் வேல். தமிழ் ஆயுத எழுத்து ஃ, இவ்வாறு தமிழ் வேறு முருகன் வேறு அல்ல. எல்லாம் அவனே.



ஆறுமுகன் வள்ளி தேவயானை சமேதராக நல்லைப் பதியில் எழுந்தருளியுள்ளான். நாடும் அணியையே பணியாகக்கொண்டு உண்மையான அன்போடு நெக்குருகி வழிபட்டால் குஞ்சரிபாகன் நிச்சயம் குறை தீர்ப்பான்.

"காரி மாமிசை காலன் வரிற் கலைத் தேர்மாமிசை வந்து எதிர்ப்படுவாய்" என்பது அருணகிரியார் திருவாக்கு.

காலம் வந்ததென்று யமன் உயிர்கவர வரும்போது மயிலாகிய தேர்மீது இவர்ந்து அவனை எதிர்த்துப் பக்தனைக் காப்பது முருகனது கடமை என்கிறார். பக்குவப்பட்ட ஆன்மா இப்பரந்த நிலவுலகில் கண்ணே பிறவியெடுத்து உழலாமல் பேரின்ப வீடெய்த முருகன் உதவுவான்.

வள்ளிதான் பக்குவப்பட்ட ஆன்மா. ஆனால் அவளோ மான்மகள். எனவே காலம் வரும்வரை காத்திருந்து கன்னியைக் கவர்ந்து சென்று விடுகின்றான். "பார்வை எனமாக்களை முன்பற்றிப் பிடித்தற்காம் போர்வையெனக் காணப் புலி" என்பதற்கிணங்க இறைவன் நம்மை ஆட்கொள்ள மானுட வடிவந்தாங்கி வருவார் என்பது உணர்ந்த உண்மை.

"செம்மான் மகளைத் திருபுரியும் நல்லைக்கந்தன் தேர்மீது எழுந்தருளி எம் வினை நீக்கும் காட்சி சொல்லுந் தரமன்று.



முருகன் என்றால் அழகன் என்பது பொருள். தமிழே வடிவான முருகன் நல்லைப் பதியில் நமக்கருள வருகின்

சைவப்புலவர்

### இராசையா ஸ்ரீதரன்

றான். முருகன் சரங்கள் பன்னிரண்டும். உயிரெழுத்துக்களும் பன்னிரண்டு கந்தனுக்குக் கண்கள் பதினெட்டு.

தொல்லை வினை தீர்க்க வென்றே நல்லைப்பதியில் எழுந்தருளியிருக்கின்றான். அல்லும் பகலும் அநவரதமும் துதித்தால் இல்லையெனாது வரமீந்தருள் புரிவான்.

நாவலர், யோகர் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள் தம்பிரான் சுவாமிகள் என்று இன்னோரன்ன பல அனுபூதிமான்களும் கந்தனைக் கைதொழுதே நற்கதியடைந்தனர். அவர்கள் காட்டிச் சென்ற வழியில் நாமும் சென்று நல்லைப்பதியமர்ந்த நாயகனைத் தொழுது, நற்றாள் பணிந்து நலம்பல பெறுவோமாக.

செம்மான் மகளைத்
திருடுந்திருடன்
பெம்மான் முருகன் பிறவான்
இறவான்
சும்மாயிரு சொல்லற
என்றலுமே
அம்மா பொருளொன்று
மறந்திலனே!
— அநுபூதி.

## நேரம் தவறாத பூசை

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஆதி

நல்லூரான் பூசை தினம்
நாள் நேரந் தப்பா தென்றும்
எல்லோரும் பார்க்க அடி கிளியே
ஏற்றொழுங்கு உண்டாமடி - கிளியே
ஏற்றொழுங்கு உண்டாமடி

நற்கிடியல் நாலரைக்கே
நாள்நேரந் தப்பிடாமல்
பள்ளியறைப் பூசையது - கிளியே
பார்த்துக் களிக்கலாமே - கிளியே
பார்த்துக் களிக்கலாமே

காலை ஐந்து மணியடிக்க
கணபதியின் பூசை முதலாய்
வேலோனின் பூசைகளும்
விடியுமுன் தொடருமடி - கிளியே
விடியுமுன் தொடருமடி

பாரியநல் மணிபதினொன்று
பத்தடிக்கப் பகலோனாசம்
சூரிய பூசையுடன் - கிளியே
தொடருமடி மறுபூசை - கிளியே
தொடருமடி மறுபூசை

காலமுச்சி பன்னிரண்டில்
கந்தனுடன் மற்றவர்க்கும்
சிலமாய்ப் பூசையடி - கிளியே
செய்வாரடி கதவடைக்க - கிளியே
செய்வாரடி கதவடைக்க

மாலைமணி நான் கொலிக்க
மறுபடியுந் திரை நீக்கி
காலைபோற் பூசையடி - கிளியே
கண்டு தொழ வாய்க்குமடி - கிளியே
கண்டு தொழ வாய்க்குமடி

ஐந்துமணிக் கெற்ற நாளும்
அடியார்கள் கூட்டமெழ
அந்திக் காலப் பூசையடி - கிளியே
அற்புதக் காட்சியடி - கிளியே
அற்புதக் காட்சியடி

இப்பூசை தொடர்ந்துடனே
எங்கள் முருகேசனவன்
தப்பாமல் முரசொலிக்க - கிளியே
தாம் வீதி வருவானடி - கிளியே
தாம் வீதி வருவானடி

வள்ளல்முருகேசனுக்கு
வழமையாய் ஐந்தரைமேல்
பள்ளிசெல்லும் பூசையடி - கிளியே
பரவச மூட்டுமடி - கிளியே
பரவச மூட்டுமடி.

— சேந்தன்.

## ஆறுமுக தத்துவம்

'அரிது அரிது மானிடராதல் அரிது' என்பது ஔவைப் பாட்டியின் தெய்வீக வாக்கு "விடிவாமளவும் விளக்கனைய மாயை" என்பது உமாபதி சிவத்தின் அருளுபதேசம். இந்தச் சரீரம் உபகரிக்கப்பட்டதன் நோக்கத்தை அறிந்து அதன் வழி நாம் செயற்பட வேண்டிய அமைந்ததே சைவ வாழ்க்கையாகும்; வாழ்க்கையில் ஒருவன் துன்பப்படுவதற்குக் காரணம் காமம் ஆசைகளாகும். எனவே அவற்றை முதலில் நீக்கவேண்டும்.

மனிதனின் வாழ்க்கையை அழிக்கும் ஒரு நெருப்பு கோபம், அதனை அவன் அடக்க வேண்டும்: மனிதனுடைய இதயத்தைச் சுருக்குவது. அதாவது ஒருவனுடைய வாழ்வின் மாட்சிமையைக் கெடுப்பது குரோதம். ஈயாத பண்புள்ளவன் மனிதனல்ல. லோபி சமூகத்திற்குப் பயன்படாதவன், ஒருவன் தான் பிரபஞ்சப் பொதுவுடைமை என்பதை மறுக்க வைப்பது மதம், அதாவது அகங்காரம்.

எனவே ஆறு உட்பகைகளையும் அறுத்து ஆறு தெய்வீகத் தன்மைகளான அன்பு,

(7 ஆம் பக்கம் பார்க்க)

## தீராத பிணி தீர்வர்!

தில்லை நடராசா அருள் சேயே! உன் அற்புதத்
திருமன்றில் வந்த பேர்கள்.
தீராத பிணி தீர்வர் ஓராயிரம் பிறவி,
செய்த பாவங்கள் ஒழிவார்.

எல்லையில்லா இன்பம் எய்துவார் மலடிமார்
இனிய மகவு சுமந்தெடுப்பார்,
இரு கண்ணும் குருடான பேர்கள் வான் விழி பெறுவர்,
இல்லார் அரசர் ஆவர்.

சொல்லை அறியா மூடர் ஞானபிரசங்க மழை
சொரிவர் நான் கோன் துயர் கெடும்
துன் மரணம் அகலும் என்னுடைய பழவினைத்
தொடர்பு அறா வகை என்னவோ.

வல்லை என்னை ஆள உன் மனம் இரங்குவாய்,
வளமேவு நல்லை நகர் வாழ்,
மங்கை உமை பாலனே! செங்கை வடிவேலனே
மயில் வாகனக் கடவுளே!

— நவாலியூர் சோமசுந்தரப்புலவர்


ராணி ஜுவலர்ஸ்
இதுவரை இல 63, கன்னாதிட்டி வீதி
யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த
எமது ஸ்தாபனம்
தற்போது சற்று முன்பாக
கஸ்தூரியார் வீதி (இல 246)
எனும் முகவரிக்கு
ராணி நகையகம்
எனப் பெயர் மாற்றப்பட்டு இயங்குகின்ற
தென்பதை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
அறியத்தருகின்றோம்

★ மூக்குக் கண்ணாடி அகம்
★ பல்கட்டும் நிலையம்
பி. ஐ. பர்னான்டோ
542, ஆஸ்பத்திரி வீதி
(யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக)
யாழ்ப்பாணம்

★ அழகு சாதனப் பொருள்கள்
★ எவர் சில்வர் பொருள்கள்
★ மணிக்கூட்டு வகைகள்
★ பிளாஸ்டிக் பொருள்கள்
போன்றவற்றினை
மொத்தமாகப் பெற்றுக் கொள்ள
ஜெயா அழகு மாடம்
187, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்
சில்லறையாகப் பெற்றுக் கொள்ள
177 A, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்

தங்கப் பவுண் நகைகளை
நம்பிக்கையுடன் பெற்றுக் கொள்ள
தீபா நகையகம்
177 A, சந்தோஷம் தெரு, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

[illegible] "மூனாயனூர்" [illegible] குடியிருக்கும் [illegible] விற்பனைக்குண்டு. [illegible] 214, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (32690)

[illegible] இறைச்சி கோழிக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன், மல்லிகை வீதியூடாக, சிங்கம் லேன், உடுவில். (32682)

சிறிய கடிகளுக்குரிய ஆர். பி. லோ. குசன் மெத்தை விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ. நாதன், இல. 16/3, விதானையார் வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். (32697)

13 அடி கொங்கிறீற் தூண், ஓடு, பழைய பனை மரங்கள், நீராந்தி 6' 2'' பழைய நிலை விற்பனைக்குண்டு. தொடர்பு: ஐ. பொன்னையா, பிரதான வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. (32674)

சிங்கர் டீப்பிறீசர் 360 லீற்றர், 400 லீற்றர் (Singer Deep Freezer, 300 Litres, 400 Litres) விற்பனைக்கு உண்டு. இல. 87 (157/1), ஸ்ராண்லி வீதி, யாழ்ப்பாணம். (32646)

நல்ல இன சடை முயல், கிளி, பன்டம் முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். திருமதி சண்முகநாதன், இத்தியடி பிள்ளையார் கோவிலடி, சங்கத்தானை, சாவகச்சேரி. (32576)

### விற்பனையாகின்றது

ஜுனியர் விகடன் (பல நிறுவனங்களும் தகவல்) ஞான பூமி ஆண்டு மலர், ராணி, விகடன், கோகிலம், சோதிட ஆய்வு நிறுவனத்தின் ஒரே பார்வையில் திருமணப் பொருத்த விதிகள். (M. N. கணேந்திரராஜா) O/L கணிதம் I and II (திருமதி ச. ம. சுவிகலநாதன்) ஸ்ரீகாந்த் புத்தகசாலை, யாழ்ப்பாணம் நல்லூர். தலைமை: மக்ரீன் புத்தகசாலை. (சி-8678)

### சேவல் விற்பனைக்கு

தடுப்பு ஊசி ஏற்றப்பட்ட ஒரு மாதம் வளர்ச்சி அடைந்த பிறவுன், கறுப்பு சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. மல்லிகாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (32644)

### காணி விற்பனைக்கு

ஆவரங்கால் சிவன் கோவிலுக்கு அருகில் பத்துப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கும், தென்னைப் பயிர்ச் செய்கைக்கும் உகந்தது. தொடர்பு: இல. 687, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (32604)

### தேவை

நல்ல நிலையில் உள்ள உருத்திர வீணை தேவை. தொடர்பு: 198, அரசடி வீதி, கந்தர்மடம். (32692)

### திருத்துநர் தேவை

சகல எலெக்ரோனிக் மற்றும் கடிகாரங்கள் முழுமையாக திருத்துவதில் பல வருட அனுபவம் உள்ளவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். டிக்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (சி-9025)

### நல்லூர் முருகன்

இணை மணி மாலை பிரதி ஒன்று ரூபா 25/ நல்லூர்ப் புத்தகசாலைகளில் கிடைக்கும். வை. க. சிற்றம்பலம். (7625)

### புரோயிலர் குஞ்சுகள்

Prima (பிறிமா) ஒரு நாள் புரோயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகாபதி", சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய் (32681)

### அனுமதிப் பரீட்சை

ஆண்டு-6 மாணவர்களை பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சைக்குரிய பயிற்சி வினாத்தாள்கள் (கணிதம், தமிழ், ஆங்கிலம்) ஒவ்வொரு ஞாயிறும் எம்மால் வெளியிடப்படும். விடைகளின் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். Bond 58 A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (7744)

### "மாறாத மனங்கள்"

தொல்புரம் கிழக்கு விக்கி னேஸ்வரா சனசமூக நிலைய வாசகர் வட்டத்தினரால் 28-8-94 அன்று வெளியிடப்பட்ட திரு. தி. உதயசூரியனின் "மாறாத மனங்கள்" என்ற சிறுகதைத் தொகுதியினை யாழ். மாவட்டத்திலுள்ள சகல புத்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும். (32684)

### சன்மானம்

பணிவான வேண்டுகோள் யாழ்ப்பாணம் பகுதியில் சிறிய கறுப்புக் கைப்பைக்குள், வங்கிப் புத்தகம், சேமிப்புப் புத்தகம், அடையாள அட்டை ஆகியவை தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் திருமதி புவனேஸ்வரி வைத்திலிங்கம் "தாமோதரவாசா" சுழிபுரம் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும். அல்லது அனுப்பி வைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (32686)

### வேப்பம், இலுப்பை விதை

சுத்தமான வேப்பம், இலுப்பை விதைகள் வாங்குகிறோம். அண்ணா கோப்பிக் கடைகளிலும் ஒப்படைக்கலாம். "மிக்கவைத்" (சி-8984)

### ஆண்டு 3. 4. 5

8-9-94 இல் வெளியிடப்பட்ட பிரபல பாடசாலைகளுக்கான மாதிரி அனுமதிப் பரீட்சை வினாத்தாள்களைப் பெற்றுக் கொள்ளாதவர் பெற்றுக் கொள்ளலாம். ஆண்டு 4 மாதிரி வினாத்தாள் 11-09-94 ஆண்டு 3 மாதிரி வினாத்தாள் 18-9-94 வெளியிடப்படும் மாதிரி வகுப்புகளும் ஆரம்பமாகியுள்ளன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (32693)

### மணமக்கள் தேவை

செவ்வாய்க் குற்றமற்ற 37 வயது டாக்டர் பெண்ணுக்கும், 37 வயது T A க்கும், 34 வயது டாக்டருக்கும், பிரான்ஸிலுள்ள 37 வயது சத்தோஷிக்கருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம். (32695)

### மணமகன் தேவை

14-9-64இல் பிறந்த இந்து 7இல் செவ்வாய் (இராபாலம் 49) மூலம் உள்ள லண்டனில் A. A. T. போடு வேலை செய்யும் பெண்ணுக்கு தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (32694)

### தவறிவிட்டது

முக்கிய ஆவணங்களுடன் நான்கு கட்டு கொப்பி கடந்த வியாழக்கிழமை (1-9-94) சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கும் சங்கத்தானைக்குமிடையில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி ஜனனி ஸ்ருடியோவில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி-9021)

### மகாதேவா ஜோதிடம்

வியாழ மாற்றம் வெளிவந்துள்ளது. இல. 140, செம்மணி வீதி, கல்வியங்காட்டுச் சந்தைக்கு அருகில் சோதிடரைத் தினசரி சந்திக்கலாம். (32615)

### வெளிவந்துவிட்டது

பலரும் நீண்ட நாளாகத் தேடிக் கொண்டிருந்த நூல் "சைவ விரதங்களும் விழாக்களும்" புதிய பதிப்பு வெளிவந்துவிட்டது: ஆகிரியர் கோப்பாய் சிவம். எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (32606)

---

உ

வல்வை, வயலூர் தீருவில்

## ஸ்ரீ முருகன் தேவஸ்தான

## சங்காபிஷேக விழா

நாளை 05 — 09 — 1994 திங்கள் பகல் 10 மணியளவில் 1008 சங்காபிஷேகம் நடைபெறும்.

விசேட நிகழ்ச்சிகள்

★ நாதஸ்வரம்
தொண்டமனாறு M. கோவிந்தராஜன் குழுவினர்
இணுவையூர் N. R. K. இரத்தினகுமார்
N R. K. வாகீஸ்வரன் குழுவினர்

நண்பகல் 12 மணி
வாகீச கலாநிதி, அருள்மொழிச் செல்வர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களால்
**"பிரணவ உபதேசம்"**
என்னும் விடயம் பற்றியும்
ஆறு. திருமுருகன் B. A. அவர்களால்
**"வள்ளி குஞ்சரி மணாளன்"**
என்னும் விடயம் பற்றியும்
சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெறும்;
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

\- தர்மகர்த்தா.

[32683]

---

## யாழ்ப்பாணம் மன்றம்

வழங்கும்

## இசை விழா

முதல்நாள் நிகழ்வுகள்

இடம்:
நல்லை ஆதீனம்

காலம்:
இன்று (04 - 09 - 1994) ஞாயிற்றுக் கிழமை மாலை 6-35 மணி — 9-35 மணி

யாழ்ப்பாண மன்ற மாணவர்களின் இசை நிகழ்வுகளுடன் விசேட நிகழ்வாக

புல்லாங்குழல் இசை

★ செல்வன் பா. சுதந்தன் — புல்லாங்குழல் (யாழ். மருத்துவபீட மாணவன்)
★ இசைக்கலை மணி பா. கண்ணன் — வயலின்
★ செல்வன் க. சுஜன் — மிருதங்கம்

(சி 1669)

---

## NEW SCIENCE HALL

KANNATHIDDY ROAD, JAFFNA.

## 94 A/L

பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான பகல்நேர வகுப்பு

## DAY CLASS

(பாடசாலை விலகிய மாணவர்களுக்குரியது)

ஆரம்பம்: **09 - 09 - 94**

வெள்ளிக்கிழமை காலை 8-00மணி

(சி/8976)

---

## ST. PATRICK'S COLLEGE

JAFFNA

## அனுமதி விண்ணப்பம் - 1995

பின்வரும் வகுப்புகளுக்கு மட்டுமே மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

முதலாம் ஆண்டு: 01-02-1989 — 31-01-1990க்குள் பிறந்திருக்க வேண்டும்
நான்காம் ஆண்டு: 1986 இல் பிறந்திருக்க வேண்டும்
ஆறாம் ஆண்டு: 1984 இல் பிறந்திருக்க வேண்டும்
ஒன்பதாம் ஆண்டு: 1981 இல் பிறந்திருக்க வேண்டும்

★ விண்ணப்பப்பத்திரம் (பரீட்சைக் கட்டணம் உட்பட) ரூபா 100/-.
05-09-1994 தொடக்கம் 23-09-1994 வரை பாடசாலை நேரங்களில் காலை 9-00 — 1-00 மணி வரை கல்லூரி காரியாலயத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

★ நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 26-09-1994ஆம் திகதிக்கு முன் கல்லூரி காரியாலயத்தில் காலை 9-00 — 12-00மணிக்குள் நேரில் வந்து சமர்ப்பிக்கவும்.

★ அனுமதிப் பரீட்சைத் தினம்: 08 — 10 — 1994
நேரம்:

| ஆண்டு | சமுகம் தரவேண்டிய நேரம் (காலை) | பரீட்சை ஆரம்பம் (காலை) |
|---|---|---|
| 9 | 8.00 | 8-30 |
| 6 | 8-00 | 8.30 |
| 4 | 8-00 | 8-30 |
| 1 (இல. 01—100) | 8-00 | 8-30 |
| 1 (இல. 101—250) | 10-30 | 11-00 |

★ 6ஆம், 9ஆம் வகுப்புகளுக்கு நடத்தப்படும் அனுமதிப் பரீட்சையில் 85% திறமை காண்பிக்கும் முதல் 10% மாணவர்களுக்கு வழமைபோல் யாழ் ஆயர் புலமைப்பரிசில் வழங்கப்படும்.

★ தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்களும் குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் வரும் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

\- கல்லூரி அதிபர்,

[சி-8988]

---

உ

ஸ்ரீராம ஜெயம்

## விவாஹ சுப முகூர்த்தப் பத்திரிகை

நிகழும் சுபமங்கள பவவருடம் ஆவணித்திங்கள் 23ஆம் நாள் குருவாரம் (08 - 09 - 1994) சித்த யோகமும் அத்த நட்சத்திரமும் திருதியைத்திதியும் கூடிய காலை 8-40மணி முதல் 10-15மணி வரையுள்ள துலாலக்ன சுபமுகூர்த்த சுப வேளையில்

நாகம்மாள் கோவிலடி, தங்கோடை, காரைநகர்
பிரமஸ்ரீ நா. தேவதாசசர்மா சரஸ்வதி அம்மா
தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன்
சிரஞ்சீவி **பாலச்சந்திரசர்மா** அவர்களுக்கு
(கிராமசேவை உத்தியோகத்தர்)

கல்வியங்காடு
பிரம்மஸ்ரீ இ. பாலேந்திரசர்மா
தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி
சௌபாக்கியவதி **மதுமதி** அவர்களை

கன்னிகாதானம் மாங்கல்ய தாரணம் பாணிக்கிரகணம் செய்து வைக்க அன்னை அருள்மிகு ஸ்ரீநாகபூஷணி அம்மன் அருள் பாலித்துள்ளமையினால் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மணமகள் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் பந்துமித்திர சகிதம் வருகைதந்து திருமணத் தம்பதிகளை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுபமஸ்து

சமாவர்த்தனம்: மதியம் 5மணி 08 — 09 — 1994 மணமகன் இல்லம்
வரவேற்புபசாரம்: மாலை 4மணி 08 — 09 - 1994 மணமகன் இல்லம் சங்கரத்தை வட்டுக்கோட்டை

★ தங்கள் நல்வரவை நாடும் ★

இங்ஙனம்

பிரம்மஸ்ரீ நா தேவதாசசர்மா-சரஸ்வதிஅம்மா
பிரமஸ்ரீ பொன் குமாரசாமி குருக்கள் தம்பதிகள்
நாகம்மாள் கோவிலடி, தங்கோடை, காரைநகர்.
நாகம்மாள் கோவிலடி அராலி மத்தி, அராலி.

பிரம்மஸ்ரீ இ. பாலேந்திரசர்மா தம்பதிகள்
(ஓய்வு பெற்ற மின் அத்தியட்சகர்)
மடம் ஒழுங்கை, 3ஆம்கட்டை பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.

மணமகன் - மணமகள் வீட்டார் அழைப்பு

[7743]

---

யாழ். ஸ்ரீதர்

## அகல வெண்திரையில்

தினசரி காலை 10-30 மணிக்கு

## WAY OF THE DRAGON

(கராட்டி)

தினசரி மாலை 4-00, 6-00 மணிக்கு

## CIRCUS

உதைபந்தாட்ட ரசிகர்களுக்காக......

சனி, ஞாயிறு பிற்பகல் 2-15 மணிக்கு

## SOCCER WORLD CUP-'994

BRAZIL Vs. ITALY - FINAL

உலகக்கிண்ண உதைபந்தாட்டம்-1994

பிறேசில் எதிர் இத்தாலி—இறுதி ஆட்டம்

(சி/8979)

---

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

பண்டத்தரிப்பு கோட்டம்

## பொதுச்சபைக் கூட்டம்

இடம்:
சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை

காலம்:
05 - 09 - 1994 (திங்கள்) பி.ப. 3. 30 மணி

விடயம்:
புதிய நிர்வாகசபை தெரிவும் புதிய நடைமுறை விளக்கங்களும்

மாவட்ட ஒன்றிய நிர்வாகத்தினரும் தனியார் கல்வி நிர்வாகப் பிரிவினரும் கலந்து கொள்ளவிருப்பதால் கூட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து அனைத்து உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளவும்.

குறிப்பு:
அன்றைய தினம் பண்டத்தரிப்பு கோட்டத்தில் மாலை நேரம் சகல நிறுவனங்களுக்கும் விசேட விடுமுறை தினமாகும்.

பொதுச்செயலாளர்,
யாழ். மாவட்டம்.

(சி/8981)

---

## யாழ். வணிகர் கழகம் விடுக்கும்

## முக்கிய அறிவித்தல்

நல்லூர் தீர்த்த உற்சவத்தை முன்னிட்டு நாளை 05 — 09 — 1994 திங்கட்கிழமை யாழ் வணிகர் கழக எல்லைக்குட்பட்ட அனைத்து வணிக நிலையங்களும் முழுமையாக பூட்டப்பட்டிருக்கும் என்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

பொதுச் செயலாளர்,
யாழ் வணிகர் கழகம்.

(சி/9024)

---

## வாடிக்கையாளர்களுக்கு

## அன்பான அறிவித்தல்

## ஸ்ரீகண்ணா இனிப்புத் தொழிற்சாலை

மானிப்பாய்.

தரமான, இனிப்பு, ரொபி வகைகளை உற்பத்தி செய்யும் எமது நிறுவனம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது என்பதனை எமது விநியோகஸ்தர்கள், விற்பனைப் பிரதிநிதிகள், கடை உரிமையாளர்கள் அனைவருக்கும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம். அனைவரும் தொடர்ந்து எமக்கு ஆதரவு தருமாறு அன்புடன் வேண்டுக் கொள்கிறோம்.

உரிமையாளர்:
ஸ்ரீகண்ணா தொழிற்சாலை.

சோதிவேம்படி ஒழுங்கை,
மானிப்பாய்.

(32664)

---

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு: 09 — 03 — 1929



உதிர்வு: 04 — 09 — 1989

## திருமதி ஆரோக்கியம் செபமாலை

அன்னை நீ எம்மை அன்பினால் மகிழ்வித்தாய்
அறிவை ஊட்டி எம்மை அகிலத்தில் உயர்த்தினாய்
அறநெறி நின்றெம்மை ஒழுகச் செய்தாய்
ஆண்டைந்து போயினும் அகன்றிடுமோ நினைவலைகள்!

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கழுவாடி,
குளைக்கோட்டை.

(32685)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## ஒளி சுடரும் ஆரம்பம்

போர் நிறுத்தத்திற்கும், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கும் நாம் தயார் என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம்;

சமாதானமும், இயல்பு நிலையும் தோன்றுவதற்குப் புதிய அரசாங்கம் மேற்கொள்ளும் சகல உருப்படியான முயற்சிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கவும் நாம் தயாராக உள்ளோம்.

இவ்வாறு அறிவித்திருக்கிறார் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன். தமது அந்த விருப்பத்தை உறுதிப்படுத்தும் ஆரம்ப சமிக்ஞையாக, நான்கு வருடங்களுக்கு மேலாக விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருந்த போர்க் கைதிகளில் பத்துப் பேரை விடுதலை செய்யவும் அவர் உத்தரவிட்டார்.

தமிழீழத் தேசியத் தலைவரின் உத்தரவின் பேரில் போர்க் கைதிகள் கடந்த வெள்ளியன்று விடுவிக்கப்பட்டமை புதிய பிரதமர் சந்திரிகா இனப்பிரச்சினை யுத்த நிறுத்தம் சம்பந்தமாக வெளிக்காட்டிய நல்லெண்ணத்திற்கு — பொருளாதாரத் தடையை தளர்த்தியமைக்கு பதில் நல்லெண்ண நடவடிக்கையாகவும் அமைகிறது.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவது, சமாதானத்தையும், சமூக நிலையையும் உருவாக்குவது. இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண்பது என்பன தொடர்பாக புதிய பிரதமர் சந்திரிகா புதிய அணுகுமுறையை — வரவேற்கத்தக்க அணுகுமுறையை — கையாளத் தொடங்கி உள்ளார்:

ஆட்சியில் இருந்து வீழ்த்தப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி இனப்பிரச்சினையைக் கையாண்ட முறைக்கும், இப்போதைய அரசு கடைப்பிடிக்க உத்தேசித்துள்ள முறைக்கும் முற்றாக வித்தியாசம் இருக்கும் என்று நம்பவைக்கும் விதத்தில் பேசுவதோடு நிற்காமல், செயலிலும் காட்ட முனைகிறார் சந்திரிகா.

அவரின் அந்த முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு விடுதலைப் புலிகள் தயாராக இருக்கிறார்கள் என்பதனைத் தலைவர் பிரபாகரனே அறிவித்துவிட்டார்.

நீண்ட காலமாகப் புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினையைச் சமாதானமாக தீர்க்கும் முயற்சியின் ஆரம்பம் இரு தரப்புகளிலும் ஒளி சுடர்வதாக உள்ளது. இதனை ஒரு நல்ல சகுனமாகக் கொள்ளலாம்;

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் தாம் எடுக்கும் முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைக்கும் என்பதனை மனதிற்கொண்டு பிரதமர் சந்திரிகா இனி வேகமாகச் செயற்படலாம். அல்லவா?

சமாதானத்தை உருவாக்குவதற்குத் தாம் தயாராக இருந்த போதிலும், அதற்கு விடுதலைப் புலிகளே முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள் என்ற பொய்யை முந்திய அரசு பரப்பி வந்தது. அந்தப் பொய்மை இப்போது அழிக்கப்பட்டிருக்கிறது.

சந்திரிகாவின் புதிய அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் புலிகளின் நிலைப்பாடு மிகத் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் பந்தை அடுத்த பக்கத்திற்குப் போடும் உத்தியை - அரசியல்வாதிகள் அடிக்கடி கையாளும் தந்திரத்தை - ஒதுக்கி வைத்துவிட்டு அவர்களையும் இணைத்துக்கொண்டு, இனப்பிரச்சினையைத் தீர்க்கும் இலக்கை நோக்கி ஓடி, அதனை அடைய வேண்டும்.

தமிழர் தம் இலட்சியத்தின் வடிவமாகவும், திறமை, சாதுரியம், வல்லமை, நெஞ்சுறுதி கொண்ட ஆதர்ஷ தலைவராகவும் விளங்குபவர் தேசியத் தலைவர் பிரபாகரன். சிங்களவர்கள் மத்தியில் துணிச்சலும், கவர்ச்சியும் மிகுதலைவராக உருவாகியிருப்பவர் சந்திரிகா. இருவரும் புரிந்துணர்வுடனும் நல்லெண்ணத்துடனும் சேர்ந்து உழைத்து சமாதானமும், சமூகநிலையும் தோன்ற உதவுவார்கள் என நம்புவோமாக.

# சித்தமருத்துவ துறை வளர்ச்சிக்கு தமிழ் மக்கள்தான் உதவவேண்டும்

சித்த வைத்தியர் கூட்டுறவுச் சங்கம், சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்து, பனை — தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் சித்த வைத்திய சுகாதார சேவையை யாழ். குடாநாட்டில் அறிமுகப்படுத்தி வருகின்றது.

சித்தவைத்திய ஆராய்ச்சி நிலையத்தின் தலைவரும் பிரதம வைத்திய ஆராய்ச்சியாளருமான வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் இது பற்றி உதயனுக்கு தெரிவித்த கருத்துகள் இங்கு பிரசுரமாகின்றன.

இலங்கையிலே சித்தமருத்துவத்துக்கு தனியான சிறு மரபு உண்டு.

இலங்கை வரலாற்றிலே சித்த மருத்துவம் சிறப்பான ஒரு இடத்தை வகிக்கின்றது. இலங்கையின் அரசர்கள் எல்லாருமே சித்த மருத்துவத்தில் நிபுணர்களாக விளங்கியமையே இதற்குக் காரணமாகும்.

அரசர்களுக்கு இடையே நடைபெற்ற மோதல்களில் வெற்றி தோல்வியை, இறைமையை, இறைமை சித்த மருத்துவமே தீர்மானித்ததாக வரலாற்று நூல்களில் காணக் கிடக்கிறது.

இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த நமது மருத்துவ முறை அந்நியர் ஆட்சியில் அரசு கட்டிலில் இருந்து தூக்கி வீசப்பட்டது.

### வைத்தியம்

இலங்கையின் சிறந்த மருத்துவ நூல்கள் வெளிவந்தன.

சரித்திர ஆதாரங்களுக்கு முற்பட்ட காலத்திலேயே சித்த வைத்திய முறை வைத்திய நூல்களிலே கூறப்பட்டுள்ளது.

*இராவணன் ஒரு சித்தர்*

உதாரணமாக, இலங்கையின் பேரரசனாக விளங்கிய இராவணன் ஒரு சிறந்த சித்தர் ஆவார்: அவர் மூன்று வைத்திய நூல்களை எழுதியுள்ளார். அதில் ஒன்று அர்க்க பிரகாசம் என்னும் நூலாகும். மூலிகைகளை மதுசாரத்தில் ஊறவைத்து வடித்து மருந்து தயாரிக்கும் முறையை இந்த நூல் விவரிக்கிறது. இந்த மருந்துகள் சாராய ஊறல்கள் என்று சித்தர்களால் பெயரிடப்பட்டுள்ளன. மூலிகைச் சார மருந்து

## வடபகுதியில் பிரபலமாகும் சித்தத்துறை சுகாதார சேவை

வகைகளுக்கு எல்லாம் ஆதிநூலாக இது கருதப்படுகிறது;

இன்று நோய்கள் புதிதாகக் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஆனால் இந்நோய்கள் எல்லாம் சித்த மருத்துவத்தில் ஏற்கனவே கூறப்பட்டுள்ளன. சித்தர்களினால் கண்டுபிடிக்கப்பட்ட நோய்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 448 ஆகும்.

தமிழர்களுடைய சித்த வைத்திய முறை தனித்துவமானது; மிகவும் விரிவானது பூரணமானதும் கூட.

*தனித்துவமான மருத்துவ முறை*

சித்த வைத்திய முறைக்கும் ஏனைய வைத்திய முறைகளுக்கும் தொடர்பு கிடையாது. இம்முறை உயிர்த்தாது, உடற்தாது கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

சித்த மருத்துவத்தில் 14 விதமான சிகிச்சைப் பிரிவுகள் உள்ளன. வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்று உயிர்த்தாதுக்களையும் குறிக்கும் சொற்கள் சுத்தமான தமிழாகும்.

சித்த வைத்தியம் அகத்தியரால் சங்க காலத்துக்கு முன்னரே தமிழ்மொழியில் தமிழருக்காக உருவாக்கப்பட்ட மருத்துவ முறையாகும். இதில் வேற்று மருத்துவக் கலப்புகள் கிடையாது. உலகில் தோன்றிய முதல் மருத்துவ முறை இதுவாகும்.

மூன்று வகையான சிகிச்சை முறைகள், 64 விதமான மருந்துகள் மற்றும் 14 விதமான சிகிச்சைப் பிரிவுகள் சித்த மருத்துவ முறையில் உள்ளன.

சித்த வைத்தியர்களுக்கு பெருமையைத் தேடித் தரும் நாடிப் பரீட்சை ஆயுர்வேத முறையில் கிடையாது.

*ஆங்கில மருத்துவத்துக்கு முக்கியத்துவம் ஏன்?*

ஆங்கில மருத்துவ வசதிகள் உடனே கிடைக்கக் கூடியதாக இருப்பதால் மக்கள் அதனை நாடிச் செல்கின்றனர். பெருமளவு பணச் செலவில் ஆங்கில வைத்திய வசதிகள் மக்களுக்கு கட்டுப்பாடின்றி வழங்கப்படுகின்றன.

ஆங்கில மருத்துவத்தில் நிபுணத்துவம் பெற்றவர்களின் சேவை சுலபமாகக் கிடைக்கின்றது.

ஆங்கில மருந்துகளுக்கு வழங்கப்படும் பிரசாரங்கள் சித்த வைத்தியத்துக்கு வழங்கப்படுவது இல்லை. ஆங்கில மருத்துவ துறைக்கு ஒதுக்கப்படும் நிதியில் ஒரு துளியளவே சித்த மருத்துவத் துறைக்கு ஒதுக்கப்படுகிறது.

*சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம்*

யாழ்ப்பாணம் சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம், சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நடத்தி வருகின்றது.

இந்த ஆராய்ச்சி நிலையம் புதிதாக 30 காடி மருந்துகள் 50 விதமான மூலிகைச் சாரங்கள் சத்துக்கள் மற்றும் ஏனைய மருந்துகளாக 100க்கு மேற்பட்டவற்றை கண்டுபிடித்துள்ளது.

கருத்தரங்குகள், கண்காட்சிகள் மற்றும் வகுப்புகள் மூலம் மக்கள் மத்தியில் சித்த வைத்திய சுகாதாரக் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

சித்த மருத்துவ சுகாதாரத் தொண்டர்கள் மூலம் எமது மண்ணிற்குச் சொந்தமான சித்தமருத்துவ சுகாதாரத்தை பேணி வருகின்றார்கள். ஒவ்வொரு தனி மனிதரது விவரங்களும் படுகிறார். மாதம் ஒருமுறை இலவச வைத்திய சேவை நடத்தப்படுகிறது. இச்சேவை இதுவரை 25 கிராமங்களில் தற்போது இடம்பெற்று வருகின்றது. இதற்கென சுகாதார வசதிகளற்ற, பின்தங்கிய பகுதிகளே தெரிவுசெய்யப்படுகின்றன.]

எமது ஆளணியை கொண்டும் பனை- தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் ஆதரவுடனுமே சித்தவைத்திய சுகாதார சேவை நடைபெறுகிறது. அவசர அறுவைச் சிகிச்சை நோயாளர்களைத் தவிர ஏனைய நோயாளிகளுக்கு சித்த வைத்திய சுகாதார சேவை மூலம் சிகிச்சை அளிக்கக்கூடியதாக உள்ளது.

பனை - தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் நான்கு கொத்தணிகளில் மூன்று நிரந்தரமாக இச்சேவையை நடத்தி வருகின்றன.

கோண்டாவில், நெல்லியடி, யாழ்ப்பாணம், புதுக்குடியிருப்பு போன்ற நிரந்தர வைத்திய நிலையங்கள் இயங்குகின்றன. சித்தவைத்திய மருந்தாளர்களாக மூவர் சேவை புரிகின்றனர். மேலும் 11 பேர் பயிற்சி பெற்றுவரு

## சித்த வைத்தியப் பேரறிஞர் க.பாலசுப்பிரமணியம் விண்ணப்பம்

களை இத் தொண்டர்கள் சேகரித்து வருகின்றனர். நோயாளர்கள் இனங்காணப்பட்டு, அவர்களுக்கு நடமாடும் வைத்திய சேவை மூலம் இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதற்கான செலவுகளை அந்தந்தப் பகுதி பனை — தென்னை வளக் கூட்டுறவு சங்கங்கள் பொறுப்பேற்றுள்ளன.

சித்த வைத்தியக் கூட்டுறவுச் சங்கத்தால் தயாரிக்கப்பட்ட சித்த மருந்துகளே சிகிச்சையளிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

*தொண்டர் மருந்தாளர் பயிற்சி*

சித்த வைத்திய சேவையை

### பேட்டி கண்டவர்:- தெல்லியூர் குமார்

நடத்துவதற்குரிய ஆளணி, தொண்டர் மற்றும் மருந்தாளர் ஆகியோர் சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையத்தினால் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

இச் சேவையில் ஈடுபடும் வைத்தியப் பட்டதாரிகளுக்கும் சித்த வைத்திய சுகாதார சேவை பற்றிய குறுகிய கால பயிற்சி எமது ஆராய்ச்சி நிலையத்தினால் அளிக்கப்படுகின்றது. இதுவரை 30 தொண்டர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர், மேலும் 18 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

வடபகுதியில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் சித்த வைத்திய சுகாதார சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மக்களை சுகதேகிகளாகப் பராமரிப்பதற்காகவே இச் சேவை நடத்தப்படுகிறது.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சித்த வைத்திய சுகாதாரத் தொண்டர் நியமிக்கப்படுகின்றனர்.

*சித்தவைத்திய வளர்ச்சி*

எமது மண்ணிலே அந்நியர் ஆட்சி இருந்தபோது, சித்த மருத்துவ முறை தடை செய்யப்பட்டிருந்தது. அதுமட்டுமல்ல, சித்த வைத்தியர்களை அறிவிலிகள் என்றும் அந்நியர்கள் பரிகசித்து வந்தார்கள். இதனால் அறுவைச் சிகிச்சை முறை வழக்கம் இன்றி அழிந்துபோய்விட்டது.

ஏடுகளில் உள்ளவற்றையும் தமது அனுபவத்தையும் அந்நியராட்சிக்குத் தெரியாத வகையில் தமது பிள்ளைகளுக்குப் போதித்து வந்ததன் மூலமே எமது முன்னோர்கள் சித்த மருத்துவ முறையைக் காப்பாற்றி வந்துள்ளார்கள். இதன் மூலமே சித்த வைத்திய நுணுக்கங்களை முன்னோர்களால் பாதுகாக்க முடிந்தது.

சித்த வைத்தியர்கள், இம் மருத்துவத்தின் நுட்பங்களை மற்றவர்களுக்கு தெரியப்படுத்தாமல் இரகசியமாக வைத்துள்ளார்கள் என்ற குற்றச்சாட்டு இதனால்தான் எழுந்தது. அந்நிய அரசின் தடைக்கு அஞ்சி அன்றைய சித்த வைத்தியர்கள் கடைப்பிடித்து வந்த இந்தப் பழக்கம், நாடு சுதந்திரம் பெற்ற பின்னரும் தொடர்ந்தது.

ஆனால் இன்றைக்கு சித்த வைத்திய நூல்கள் எல்லாம் அச்சேற்றப்பட்டு பகிரங்கமாக விற்கப்படுகின்றன. சித்த வைத்தியக் கல்வியும் விரிவுபடுத்தப்பட்டு சகலரும் கற்கக்கூடிய விதத்தில் பல்கலைக்கழக மட்டம்வரை போதிக்கப்படுகிறது.

சித்த மருத்துவத்துறையின் வளர்ச்சி தமிழ் மக்களுடைய ஆதரவில் மட்டும்தான் தங்கியுள்ளது.

★

## அழகன் முருகவேள்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டும். இதோ அவரது வரிகளில் சில:-

"......யாம் இரப்பவை
பொருளும் பொன்னும்-
போகமும் அல்ல- நின்பால்-
அருளும் அன்பும் அறனும்-
மூன்றும் உருள் இணர்க் கடம்பின் ஒலி தாரோயே" — என்பதாகும்

இவ்வண்ணம் நல்லந்துவனார், குன்றம் பூதனார், கேசவனார், நக்கீரியார், நப்பண்ணனார் ஆகியோர் பாடல்களில் முருகனின் அருமையும் பெருமையும் பேசப்படுகின்றன.

*சிலப்பதிகாரத்தில்*

சிலப்பதிகாரத்திலும் சிங்கார வேலனின் தனித்துவம் காட்டப்படுகின்றது. கண்ணகியை மணம் பெற்ற பின்னர் நெடுநிலை மாடத்து இடை நிலத்தே வைத்துள்ள "மயன் விதித் தன்ன மணிக்கால் அமளியின் மேல்" வீற்றிருக்கும் போது கண்ணகியின் கண்ணழகை நுகர்ந்த கோவலன் கூற்றில் "ஆறுமுகன் நெடுவேல் ஒன்றே உன் கண்களில் இரண்டாகப் படைக்கப்பட்டிருக்கின்றது" எனத் தெரிவிப்பதாய் அமைகின்றது.

"ஆறுமுக ஒருவன் ஒர்பெறு முறை இன்றியும் ......... அஞ்சுடர் நெடுவேல் ஒன்றும் நின் முகத்துச் செங்கடைமழைக் கண் இரண்டாத்தந்தது.

என இளங்கோவடிகள் வர்ணனையில் வேலின் பெருமை காட்டப்படுகிறது.

மேலும் ஔவையாரும் அழகு வேலனும் சந்தித்த சம்பவங்களில் கொடியது எது? இனியது எது? பெரியது எது? அரியது எது? என்னும் முருகனுடைய வினாக்களுக்குரிய விடைகள் உலகத்தவர்களுக்கு அறநெறியாக அமைகின்றது.

"வந்த வினையும் வருகின்ற வல்வினையும் கந்தனென்று சொல்லக் கலங்குமே" என அருமையாக முருகன் அருளால் பேசும் திறன் பெற்ற குமரகுருபரர் வேலக் குமரனை வாழ்த்தும்போது பாடிப் பெருமைப் படுத்துகின்றார்.

"சற்றில் பாலன் தேவராயன் பகர்ந்ததை" எனக் கவசம் தந்த தேவராய முனிவர்" அமரர் இடர் தீர அமரம்புரிந்த குமரனடி நெஞ்சே குறி" எனப்பலவாறு புகழ்வதோடு சிந்தை வெள்ளம் அந்தக் கந்தன் வசமிருக்க நாம் இந்திப்பதெல்லாம் கந்தசஷ்டிக் கவசமே எனவும் வலியுறுத்துகின்றார்.

ஆகவே இந்த நன்னாளில் முருகன் புகழ்பேசாத நாளெல்லாம் பிறவா நாளே என்னும் நினைவோடு மயிலேறிவரும் முருகனை துயில் நீங்கியதும், நல்லைக் கந்தன் சந்நிதியில் பாடும் பணியே பணியாய் அருள்வாய் என்ற அனுபூதிச் சிந்தையோடு, என்றும முருகன் புகழ் பாடி எந்தையே! எம் துயர்நீக்க, இருள் அகல, அறம்வளர, அன்பு முதிர, அருளைத் தருவாய் என இறைஞ்சி நிற்போமாக.

நன்றி:
நல்லைக் குமரன்

ஆறுமுக..."...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உண்மை, இன்மை, அறம், பொருள், அறிவு என்பவற்றை வளர்த்து தனக்கும் தன் சமூகத்திற்கும் நாட்டிற்கும் சர்வதேசத்திற்கும் இன்னும் சொன்னால் பிரபஞ்சம் முழுவதற்கும் உரிய வாழ்க்கை வாழுவதே சைவ வாழ்க்கையாகும். இத் தன்மைகளை வளர்க்க நமக்கு வழிகாட்டும் திருவருள் வடிவே ஆறுமுகம்.

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று நடக்கும் நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவத்தை ஒட்டி இருபத்து நான்காம் நாளான இன்று ஆலயச் சுற்றாடலில் நடைபெறும் நிகழ்ச்சிகள் வருமாறு:

**நாவலர் மணிமண்டப முன்றிலில் தெய்வீக இசையரங்கு:**

மாலை 6 — 7 மணி வரை மேரி சறோஜா ஜஸ்ரின் இசைக்கச்சேரி. மாலை 7 — 8 30 மணி வரை சாந்த நாயகி சுப்பிரமணியம், லக்ஷ்மி நடராசா ஆகியோரின் வயலின் இசை.

**நல்லை ஆதீனத்தில்:**

காலை 9.30 மணிக்கு சமய தீட்சை, மாலை 3 00 மணிக்கு சமயப் பேருரை, மாலை 3-00 மணிக்கு புராணப் படிப்பு. மாலை 4 மணிமுதல் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த [illegible] [illegible] நிகழும். இரவு 9 — [illegible] வரை பிரசங்கபூஷணம் நடேசன் சிவசண்முகமூர்த்தியின் கந்தரனுபூதி.

**மேற்கு வீதியில் உள்ள ஸ்ரீமுத்து விநாயகர் ஆலயத்தில்:**

மாலை 5 30 மணிக்கு சம்பூரண ராமாயணம் தெய்வீக இசைப்பேருரை "குசலவர் போர்" என்ற தலைப்பில் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா.

**தித்திக்கும் முத்தமிழ் அரங்கு:**

இரவு 8.30 மணிதொடக்கம் உடுப்பிட்டி சங்கீத பூஷணம் திரு என். குமாரசாமி குழுவினரின் இசைக்கச்சேரி

**யாழ்ஓசை இசை விழா**

யாழ்ஓசை இசைவிழா மாலை 6 35 முதல் 9 35 மணி வரை கி. குமரன், என். பிரபாமி, எஸ். ஜெயந்தினி, எஸ் தேனுகா, ஆர். பிரேமாதினி ஆகியோரின் வயலின் இசை, ம. சுபந்தவின் புல்லாங்குழல் இசை

(க-30-111)

## அரசுக்கு எதிரான ராணுவ சதி முயற்சி குறித்து விசாரணை

கொழும்பு, செப். 4

தேர்தல் தினத்தன்று இடம் பெறவிருந்த இராணுவச் சதி முயற்சி பற்றி பாதுகாப்பு பிரதி அமைச்சர் அநுருத்த ரத்வத்தை விசாரணை நடத்தி வருகிறார் என தெரிவிக்கப்படுகிறது.

இத்தகவலை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

இச்சதி பற்றி கேள்விப்பட்டு பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஹமில்டன் வணசிங்கவும் இராணுவத் தளபதி ஜெகத் டி சில்வாவும் ஓகஸ்ட் 13 ஆம் திகதி இரவு முழுவதும் இராணுவத் தலைமையகத்தில் இருந்தனர் என்று "புதிய" வார இதழ் செய்தி வெளியிட்டிருந்தது.

(இ-எ)



### ஏமைக் காப்பாய் நல்லூரானே!

ஆறுமுக சுவாமியே அழகுமிகு குமரனே
பார்வதியின் பாலனே சூரசங் காரனே
ஆறுமுக சுவாமியே வள்ளிமண வாளனே
அப்பனுக்குப் பிரணவத்தின் பொருளுரைத்த-
மைந்தனே
ஆறுமுக சுவாமியே தெய்வானை நாதனே
வண்ணமிகு தேரில்வரும் தங்கவேல் முருகனே
ஆறுமுக சுவாமியே ஆனைமுகன் தம்பியே
எங்களைக் காத்திடுவாய் நல்லை உறை-
தலைவனே!

— நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

### மீட்டு தரவே வருகின்றான்

சங்கரன் மைந்தன் கணபதி சோதரன்
தேரிலே ஏறி வருகின்றான்
வள்ளி தெய்வ யானை சகிதம்
நல்லூரில் பவனி வருகின்றான்
கட்ட பழத்தினை ஔவைக்குக் கொடுத்தவன்
கையிலே வேலேந்தி வருகின்றான்
தன்னையே நம்பிய அடியவர் தமக்கே
மீட்சியைத் தரவே வருகின்றான்

— நயினை விஜயன்

### இரத மூர்ந்து வருக!

பல்லவி
தேரேறி வருவாரோ தேவாதி தேவா
திருமேவும் நல்லூரின் நெடுவீதி தனிலே
சரணம்
ஓராறு முகமும் இன்னருளோடு துலங்க
சீராக இருபாகம் தேவியர் இலங்க
நீராழி அலைபோலும் அடியார் நெருங்க
அரஹரா முருகாவென் றஞ்பொலி முழங்க
(தேரேறி)
ஆராதித் திடுமடியார் அல்லல்வினை அகல
அருந்தமிழில் மாலை தொடுத்தோர் அழும் மலர
சீரோடு நாதஒலி கீதஒலி பரவ
செந்தமிழன் அதிபதியே ரதமூர்ந்து வருக!
(தேரேறி)

— கமலாம்பிகை

### காண்பதுவோ தொடையின் மாட்சி

செயிலோனை விண்ணுக்கு உகந்த விரிசடையான்
அயிலவனே, அமரர்துயர் அன்று தீர்த்த
மயிலோனே, மக்கள் துயர் இன்று தீர்க்க
ஒயிலாக வள்ளி தெய்வயானையுடன் வருவாயா
தேரேறித் தெருவீதி போகும் காட்சி
பாரேகன் இமையாது காணும் காட்சி
பக்குவத்தை உளத்தளவில் சேர்க்கும் காட்சி
இப்பிறப்பிற் காண்பதுவோ தொடையின் மாட்சி

—மதிவதனி வேலாயுதம்

### ஏறி மயிலிலே என்ன செய்கிறாய்?

மாறி மாறியே துன்பம் பெருகியே
மண்ணில் வேதனை நிரம்பி வழியுதே
ஏறி மயிலிலே என்ன செய்கிறாய்
ஏங்கி அழுவது உனக்கு கேட்குதா?
தேரில் ஏறிவரும் தேவ தேவனே
தீர்வு தமிழரை வந்து சேரட்டும்
போரில் புலருகின்ற பொழுது ஒழியட்டும்
புதுயுகமொன்று இங்கு மலரட்டும்

—காரைநகர் எம். பி. அருளானந்தன்

### வீறு கொண்டு வீழ்த்திட

மாறுபடு சூரனை வதைத்தமால் மருகன்
கூறுபட்டிருக்கும் எம்மையெல்லாம் தாக்கி
வீறுகொண் டெதிரியை வீழ்த்தி வென்று
ஆறுதல் அடைய தேரேறி வருகிறான்!

—நல்லூர் தி. பரமசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் வளர்த்ததமிழ் சைவமணம் கமழுந்தமிழ் வங்கம்மலி ஈழத்தில் வளரும் தமிழ்த் - தெய்வமே
பங்கமுறு தமிழர் படுந்துயர் கண்டும்நின் தங்கவேல் லிருப்ப தென்ன?



தரமான தங்க நகைகளை
அசல் 22 கரட்டில் செய்து பெற்றுக் கொள்ள
நம்பிக்கையுடன் நாடுங்கள்

**கனகசபை தர்மகுலசிங்கம்**

539, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். பழமுதிர்ச்சோலை. காரைநகர்.



[சி-8982]


## மரண அறிவித்தல்கள்

### S.P. நடராசா

(இ.போ.ச. மெக்கானிக் - சோண்டாகில், காரைநகர், பருத்தித்துறை டிப்போ)

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட S.P. நடராசா நேற்று (3-9-94) காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (4-9-94) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது சகோதரி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிரான்பற்று இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஐ. தங்கப்பவுண் [மருமகள்]

முள்ளைபடி வீதி,
பண்டத்தரிப்பு.
(32703)

### கணபதிப்பிள்ளை பத்மநாதன்

(நயினாதீவு)

மண்டைதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது சண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட மண்டைதீவு மகாவித்தியாலய ஓய்வுபெற்ற ஆசிரியரும், தற்போதைய சரவணை சின்னமடு றோமன் கத்தோலிக்க வித்தியாலய (அரியாலை) பகுதிநேர ஆங்கில ஆசிரியருமான கணபதிப்பிள்ளை பத்மநாதன் நேற்று (03-09-1994) காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - அரியமணி தம்பதிகளின் அன்பு மகனும், நயினாதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், தங்கம்மாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, புனித மரியாள் வித்தியாலயம் O.L.R.) அன்புக் கணவரும், ராதிகா (வர்த்தக வங்கி, கொள்ளுப்பிட்டி), அனுஷா, மேகலா (வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவிகள்) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வரெத்தினம் (பரந்தன்), பன்னீர்ச்செல்வம் (முன்னாள் பகுதிநேர விரிவுரையாளர், மொறட்டுவ), காலஞ்சென்ற கனகரெத்தினம், குலசிந்தாமணி (தபாலதிபர், மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 4 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி தங்கம்மா பத்மநாதன் [மனைவி]

இல. 4, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
(32707)

### இராஜரத்தினம் இராஜலிங்கம்

நல்லூரை வசிப்பிடமாகக் கொண்டவரும் நியூ லங்கா அலுமினியம் தொழிற்சாலை, யாழ். தனியார் வைத்தியசாலை (ஆனைப்பந்தி) ஈழநாடு பத்திரிகை நிறுவனம் ஆகியவற்றின் நிர்வாக இயக்குநருமான இராஜரத்தினம் இராஜலிங்கம் காலமானார்.

இவர் சத்தியபாமாவின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற திரு. திருமதி இராஜரத்தினத்தின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி டபிள்யூ எம். குமாரசாமியின் அன்பு மருமகனும், ஜனார்த்தனன், டாக்டர் உதுநந்தனன், கிருஷ்ணபிரியா, ரகுநந்தனன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சத்தியன்

50, லைமன் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி 8995)

### மருதயனார் சின்னத்தம்பி குருசாமி

காரம்பொன் கிழக்கை பிறப்பிடமாகவும் கொழும்புத்துறை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மருதயனார் சின்னத்தம்பி - குருசாமி காலமாகிவிட்டார்.

இவர் சுந்தரம்மாவின் அன்புக் கணவரும், கிருஷ்ணநாயகி, சிவநாயகி, தவநாயகி (தாதிய உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலை), சோதிநாயகி (சுவிஸ்), நயனி (குடும்பநலசேவையாளர் யாழ். மாநகரசபை) ஆகியோரின் அன்புத்தந்தையும், கந்தசாமி (இந்தியா), சுந்தரலிங்கம், சிவபாலன் (தாதிய உத்தியோகத்தர் யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், லலிதசொரூபினி, சொரூபன், கபிலசொரூபன், கவியா, சிவரஞ்சனி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04-09-94 இன்று பிற்பகல் 4 மணிக்கு 261/6 கொழும்புத்துறை வீதியில் (சுண்டிக்குளிச் சந்தி) உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று கொழும்புத்துறை துண்டி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்

(32706)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 04 - 09 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

தேர்தல் மாந்திரீக வேலைகளுக்கு

# நரிகளின் மண்டை ஓடுகளை நாட்டுக்குள் கடத்த முயற்சி

கொழும்பு, செப். 4

கடந்த பொதுத் தேர்தலில் சில அரசியல்வாதிகளை வெற்றியீட்டச் செய்வதற்காக மாந்திரீக வேலைகளைச் செய்வதற்கென நாட்டுக்குள் கடத்திக்கொண்டுவரப்பட்ட நரிகளின் மண்டை ஓடுகள் மிருக எண்ணெய் மற்றும் மிருகங்களின் தோல்களை இலங்கைச் சுங்கத் திணைக்களத்தினர் கைப்பற்றி அழித்தனர் — ஏ. எப். பி. செய்தி ஸ்தாபனம் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

இந்தியப் பிரஜை ஒருவர் இவற்றை நாட்டுக்குள் கடத்திக் கொண்டுவர முயற்சிக்கையில் இவை கைப்பற்றப் பட்டதாகவும் —

இவற்றின் பெறுமதி 40 லட்சம் ரூபா என்றும்—தெரிவிக்கப்பட்டது.

இப்பொருட்கள் அனைத்தும் பொது மயானத்தில் சிரேஷ்ட சுங்க மற்றும் வனவிலங்குப் பாதுகாப்பு அதிகாரிகள் முன்னிலையில் எரிக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பொதுத் தேர்தலில் அரசியல்வாதிகள் சிலரை வெற்றியீட்டச் செய்வதற்கான சூனிய வேலைகளுக்கு பயன்படுத்த அடையாளம் தெரியாத இந்தியர் ஒருவர் இவற்றைக் கொண்டு வந்தார் என சுங்கத்திணைக்களப் பேச்சாளர் தெரிவித்தார்.

(இ-எ)

## புலிகளின் குரல் வானொலியில்

04 — 09 — 1994
ஞாயிறு இரவு
★ 8-01 — இசையரங்கம் தி. அ. ஜெயராமனின் வயலின் இசை.
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தொடர் நாடகம் — இலங்கை மணி 38ஆம் அங்கம்.

05 — 09 — 1994
திங்கள் காலை
★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

**தடுப்புக்...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய சூழ்நிலையில் 200 பேரையும் விடுவிப்பதா அல்லது தொடர்ந்து தடுத்து வைத்திருப்பதா என்பது குறித்து இவ்வாரம் முடிவு செய்யப்படும் என்று பொலிஸ் தலைமையக உயர்தர அதிகாரி ஒருவர் "லங்கா தீப" பத்திரிகைக்குத் தெரிவித்திருக்கிறார்.

புதிய அரசாங்கத்தின் நல்லெண்ண நடவடிக்கைகளில் ஒன்றாக இந்த 200 பேரையும் விடுவிக்கும் சாத்தியம் குறித்தும் ஆராயப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

(அ-ஐ-6)

**வீடியோ...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அருகில் மிக நெருக்கமாகச் சென்று வீடியோக் கமெரா படம் பிடிக்கும் படியும் அவர்கள் என்னைக் கேட்டுக்கொண்டனர். இதற்காகப் பணம் தரப்படும் என்றும் அவர்கள் உறுதியளித்தனர். தாங்கள் தரும் வாகனம் ஒன்றில் ஏறிச் செல்லும்படியும் கட்டியவர்கள் என்னிடம் தெரிவித்தனர்.

"அந்த நேரம் பெரிய சத்தம் ஒன்று கேட்டது. அவர்கள் கூறியபடி நடக்க முடியாது என்று நான் தெரிவித்தேன். அதன் பின்னர் என்னை இன்னொரு வாகனத்தில் ஏற்றிச் சென்றனர். பின்னர் நான் அறிமுகத்து விட்டேன். மாவனல்லையில் வைத்து எனக்கு சுயநினைவு வந்தது. அங்கிருந்து தப்பி மாவனல்ல பொலிஸில் நடந்தவற்றைத் தெரிவித்தேன். மாவனல்லை பொலிஸார் என்னை விசாரணைக்காக கேகாலை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவ்வாறு சந்தேகநபர் தமது ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்திருக்கிறார்.

கேகாலை பொலிஸில் காவலில் வைக்கப்பட்டுள்ள அந்நபரை இப்போது இரகசியப் பொலிஸார் விசாரித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-எ-4)

**ஏனைய...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னைக்கு அரசு தீர்வு காணும் எந்த ஒரு கட்டத்திலும் ராணுவ நடவடிக்கைகள் எவையும் இடம்பெறமாட்டா.

இதுவரை பெறப்பட்டுள்ள அனுபவத்தின் பிரகாரம் ஆயுதப்படையினரின் பலத்தையோ அல்லது மனவலிமையையோ பாதிக்கக்கூடிய நடவடிக்கை எதற்கும் அரசாங்கம் இணங்கமாட்டாது.

திறந்த அடிப்படையிலான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான பூர்வாங்க முயற்சிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகளுக்கு அழைப்புவிடுக்கப்பட்டிருக்கிறது.

இப்படி அவர் மேலும் கூறினார்.

பலாலியில் உள்ள உபரதிகாரிகள் உட்பட பெரும் எண்ணிக்கையான படையினர் அந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

வடபகுதியில் உள்ள படைமுகாம்கள் பலவற்றுக்கும் ஜெனரல் அனுருத்த ரத்வத்த நேற்று விஜயம் செய்தார்.

[இ-ஐ-எ-4]

## திருமலையில் சிப்பாய் காயம்

திருகோணமலையில் இடம் பெற்ற தாக்குதல் ஒன்றில் சிறீலங்கா இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

கடந்த புதன்கிழமை திருகோணமலை ஜனகபுரம் பகுதியில் ரோந்தில் ஈடுபட்டிருந்த சிறீலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் திடீர் மோதல் ஒன்று ஏற்பட்டது.

## இராஜலிங்கம் காலமானார்

யாழ்ப்பாணம், செப். 4

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபல தொழிலதிபரும் ஈழநாடு பத்திரிகை நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும் றோட்டறி பிரமுகருமான இ. இராஜலிங்கம் கொழும்பில் காலமானார்.

இவர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலத்தில் சமூக சேவையில் முன்நின்று உழைத்தவர் ஆவார்.

(இ)

**ஜனாதிபதி...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருவதாக 'திவயின' செய்தி வெளியிட்டுள்ளது.

(இ-ஐ-6)

**நடராஜர்...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து இராணுவப் பொலிஸார் கைது செய்தனர்.

விசாரணைக்காக அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சிலை பூநகரிப் பகுதியில் இருந்து கடத்தப்பட்டதாகக் கூறப்பட்டபோதிலும்— வடக்கில் நடராஜர் சிலைகள் சில கோவில்களிலேயே காணப்படுகின்றன என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

குறிப்பாக கீரிமலை, காரைநகர் (ஈழத்துச் சிதம்பரம்) ஊர்காவற்றுறை, திருக்கேதீஸ்வரம் ஆகிய இடங்களில் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் உள்ள ஆலயங்களில் நடராஜர் சிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மிகவும் பெறுமதி வாய்ந்த இந்த சிலை தொடர்பான விபரங்களை அறிந்து கொள்வதற்காக தொல்பொருள் ஆராய்ச்சிப் பகுதியை சேர்ந்த அதிகாரி ஒருவரை காங்கேசன்துறைப் பகுதிக்கு அனுப்பி வைக்கவும் அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

(இ-ா)


## ராகமாலிகா ஆடையகம்

என ஆரம்பித்து

தரமான புடவை வகைகளை
நியாயமான விலையில் வழங்கி
வாடிக்கையாளரின் நன்மதிப்பை பெற்ற ஸ்தாபனம்
தற்பொழுது அதே இடத்தில்

## கோபிராஜ் ஆடையகம்

என பெயர்மாற்றத்துடன் தொடர்ந்தும் தன் சேவையை தொடர்கிறது என்பதை அன்பர்கள் ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இறக்குமதி செய்யப்பட்ட ஆடைத் துணிகள் மற்றும் மங்கள வைபவங்களுக்கான பட்டுப்புடைவைகள் என்பவற்றை மன நிறைவுடன் தெரிவு செய்ய நீங்கள் நாடவேண்டியது!

**கோபிராஜ் ஆடையகம்**

04 சுப்பு அங்காடி
யாழ்ப்பாணம்.
(32698)


## அறிவித்தல்

திருநெல்வேலி மேற்கு கிராம முன்னேற்றச் சங்கத்தினரால் நடத்தப்பட இருந்த அதிர்ஷ்ட லாப சீட்டு குலுக்கல் 20 11 — 1994 க்கு பின்போடப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

— தலைவர்.

(32699)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னப்பு புவனேசராணி

(இளைப்பாறிய ஆசிரியை)

உடுவிலை பிறப்பிடமாகக் கொண்டவரும், இளைப்பாறிய ஆசிரியர் சின்னப்புவின் அன்பு மனைவியுமான திருமதி சின்னப்பு புவனேசராணி 03-9-94 அன்று காலமானார்.

இவர் கந்தையா - இராசம்மாவின் அன்புமகளும், இளைப்பாறிய ஆசிரியை புனிதவதி, இளைப்பாறிய ஆசிரியை புஸ்பவதி, காலஞ்சென்ற வங்கியாளர் திருச்செல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மீனசுலோஜனா, பத்மசுலோஜனா (கொழும்பு), சிறிக்குமார் (லண்டன்), பாமசுலோஜனா (கனடா), சாந்தகுமார் (லண்டன்), லலிதகுமார் (கனடா), ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற தியாகராஜா (M. L. T), பத்மராஜா (சவூதி), யமுனா (லண்டன்), ரவிச்சக்கரவர்த்தி (கனடா), கலைபரசி (லண்டன்), உதயகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், Dr. தியாகசிவி (பேராசிரியர் பேராதனை) தயாசீலி [சுவிஸ்], சுபசீலி [பேராதனை பல்கலைக்கழகம்], மோனிரஞ்சன் [கனடா], பஞ்சசீலி, குணசீலி, சத்தியசீலி [உடுவில் மகளிர் கல்லூரி], சிறிராம் [றோயல் கல்லூரி] சியாமளி, பிரசன்னா [லண்டன்], அபிராமி, தர்ஷா, செந்தூரன், காயத்திரி [கனடா] ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
பே. சின்னப்பு [கணவர்]

1 ஆம் கட்டை,
உடுவில்,
சுன்னாகம்.
[32701]

### திருமதி விசாலாட்சி நவரத்தினம் செல்வி ஜெயசுதா நவரத்தினம்

மீசாலை வடக்கைச் சேர்ந்த திருமதி விசாலாட்சி நவரத்தினம், செல்வி ஜெயசுதா நவரத்தினம் இருவரும் 01-09-94 இல் உடையார்கட்டில் அகால மரணமானார்கள்.

இவர்கள் இ. நவரத்தினம் (முன்னாள் இ.போ.ச. சாரதி சோண்டாகில்) அவர்களின் அன்பு மனைவியும், மகளும், காலஞ்சென்ற ஜெயரூபன், ஜெயரூபி (கொழும்பு), ஜெயசுதன், ஜெயசீலன், ஜெயந்தன் ஜெயந்தினி ஆகியோரின் தாயாரும், சகோதரியும், காலஞ்சென்ற முத்துத்தம்பி – தங்கம்மா தம்பதிகளின் புதல்வியும், பேர்த்தியும், இராசகோபால் (கொழும்பு) காலஞ்சென்ற கனகமணி, சரஸ்வதி, வீரசிங்கம் (இ.போ.ச. நடத்துநர் சோண்டாகில்), இராசேஸ்வரி (நூல் நிலையம், யாழ் வளாகம்) ஆகியோரின் சகோதரியும், சின்னராசா, சரோஜினி, ராணி ஆகியோரின் மைத்துனியும், செல்வி சகுந்தலாதேவி (கு.ந சே.தோப்பாய்) செல்வானந்தம், சிவானந்தம், செந்தூரன் (சா இ. த A/L மாணவன்) ஆகியோரின் சிறியதாயாரும் ஆவார்.

அவர்களின் பூதவுடல்கள் தகனக்கிரியைக்காக இன்று (04 - 09 - 94) காலை 7 மணிக்கு இவர்களது மீசாலை இல்லத்திலிருந்து வேம்பிராய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மு. வீரசிங்கம் (சகோதரன்)

மீசாலை வடக்கு,
மீசாலை.
(சி-8994)

### திருமதி மகிழ்மலர் இராஜேந்திரம்

சுந்தலிங்கம் மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட காலம் சென்ற டாக்டர் இராஜேந்திரம் மனைவி மகிழ்மலர் 3-9-94 இல் காலமானார்.

இவர் சிறீஸ்கந்தராஜா, சந்திரராஜன், கோகிலா, டாக்டர் இராஜேந்திரப் பிரசாத், காலம்சென்ற மகிழீஸ்வரன், பாலேந்திரா, மகாலக்ஷ்மி (டுபாய்), ஆகியோரின் தாயும் டாக்டர் ஜெயநாதன், இரவிச்சந்திரன் (டுபாய்), சத்தியபாமா, டெய்சி, கௌரி, வசந்தி, சாந்தினி ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (4-9-94) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு 187, ஆடியபாதம் வீதி (மருத்துவவளாகம் அருகில்) இல்லத்தில் நடைபெற்று கோம்பையன் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
டாக்டர் R. இராஜேந்திர பிரசாத் (மகன்)

187, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
(32691)